# ශ්‍රී ලංකා හස්ත කර්මාන්ත මණ්ඩලය

# இலங்கை கைப்பணிகள் சபை

# Sri Lanka Handicrafts Board



LAKSALA

State Gift & Souvenir Boutique

# 2019

# වාර්ෂික වාර්තාව

# ஆண்டு அறிக்கை

# Annual Report



LAKSALA

STATE GIFT & SOUVENIR BOUTIQUE

# ஆண்டறிக்கை 2019

## லக்சல

## இலங்கை கைப்பணிகள் சபை

உள்ளடக்கம்.


| | |
|---|---|
| நிறுவனத் தகவல்கள் | 01 |
| லக்சல காட்சிகூடங்களின் வலையமைப்பு | 02 |
| நோக்கு மற்றும் செயற்பணி | 03 |
| செயலாற்றுகை மீளாய்வு மற்றும் தொழில்பாட்டு மீளாய்வு | 04 - 12 |
| பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் | 13 |
| சிரேஷ்ட முகாமைத்துவக் குழு | 14 |

நிதிக் அறிக்கைகள்

| | |
|---|---|
| விரிவான வருமானக் கூற்று | 18 |
| நிதி நிலைமைக் கூற்று | 19 |
| உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று | 20 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 21 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 22-43 |
| கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை | 44-51 |

## நிறுவனத்தின் தகவல்கள்

### நிறுவனத்தின் பெயர்

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல

### சட்டத்துடனான இயல்பு

**1982**ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க, தேசிய கைப்பணிகள் சபை மற்றும் இணைந்த நிறுவனங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும்.

### பிரதான அலுவலகம்

இலக்கம் : 215, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 7

தொலைபேசி : 011 2055717 / 011 2055501 தொலைநகல் : 011 2594872

மின்அஞ்சல் முகவரி : *info@laksala.gov.lk*

இணையதளம் : www.laksala.gov.lk

### சந்தைப்படுத்தல் தகவல் விசாரணை தொலைபேசி:

011 2680925

மின்அஞ்சல் முகவரி: info@laksala.gov.lk

### கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்

### வங்கியாளர்கள்

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

## லக்சல காட்சிகூடங்களின் வலையமைப்பு

| | | |
|---|---|---|
| 1.கோட்டை | இலக்கம் 60, யோர்க் வீதி, கொழும்பு 01 | 011232351 |
| 2.தும்முல்லை | இலக்கம் 215, பௌத்தாலோக்க மாவத்தை, தும்முல்லை, கொழும்பு 07. | 011258057 |
| 3.கண்டி | இலக்கம் 05, சங்கராஜ மாவத்தை, கண்டி | 081222208 |
| 4.கட்டுபெத்த | இலக்கம் 282, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ | 011260560 |
| 5.தேசிய நூதனச்சாலை | லக்சல, நூதனச்சாலை வளாகம், கொழும்பு 07. | 011269826 |
| 6.பத்தரமுல்லை | அபேகம, பெலவத்தை, பத்தரமுல்லை. கொழும்பு 07. | 011278602 |
| 7.வெலிபன்னை I | தெற்கு அதிவேக வீதி, விராம மந்திரய, சேவை இடம், ‘‘பி’’ ஏ5 மற்றும் ஏ6, வலகெதர, வெலிபன்னை | 0342241607/8 |
| 8. காலி | இலக்கம் .74/1,சமுத்திர மாவத்தை, காலி. | 0912222783 |
| 9.பின்னவளை | யானைகளின் சரணாலயம், பின்னவளை. | 0352265015 |
| 10.பேராதனை | இலக்கம் 14, தாவரவியல் பூங்கா, பேராதனை. | 0812389253/63 |
| 11.கட்டுநாயக்க | 54டி,வெளியேறும் போக்குவரத்து பகுதி ,பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க | 0112260167 |
| 12.நுவரெலியா | இலக்கம் 79, பழைய புஸ்ஸல்லா வீதி, நுவரெலியா | 0522234445 |

## எமது நோக்கு

இலங்கையில் பரிசுகள் மற்றும் நினைவுப் பரிசு பொருட்கள் சந்தையில் முதன்மையாளர் ஆகுதல்.

## எமது செயற்பணி

பரிசுகள் மற்றும் நினைவுப் பரிசு பொருட்கள் துறையில் வளர்ச்சித் திறனை விரிவுபடுத்துவதோடு, சுற்றுலாக் கைத்தொழிலுக்கு உயர் பெறுமதிகளை சேர்க்கும் பங்களிப்பை வழங்கி, கிராமிய உற்பத்தியாளர்களுக்கு பெரிய அளவிலான சந்தை வாய்ப்புகளுக்கு வசதியளித்து, சமூக பொறுப்புகளை நிறைவேற்றும் வர்த்தக ரீதியாக சாத்தியமான நிறுவனமாதல்.

## எமது கேந்திர பெறுமதிகள்

- தரம், நம்பகத்தன்மை மற்றும் பணத்திற்கான பெறுமதி.
- பன்முகப்படுத்தப்பட்ட பரிமாணத்தின்மூலம் சிறந்த வாடிக்கையாளர் தேர்வுக்கான வாய்ப்புகளை வழங்குதல்.
- கிராமிய மக்களிடையே பெறுமதிகளை உருவாக்குதல் மற்றும் பெறுமதிகளை பரிமாற்றம் செய்தல்
- வாடிக்கையாளர்களை ஆகக்கூடிய மட்டத்தில் திருப்திபடுத்தல்.

## நிலைபேறுடனான அபிவிருத்தி இலக்குகள்

- **2030**ஆம் ஆண்டில் உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்கின்ற உற்பத்திகளின் அளவுகளை இரட்டிப்பாக்கி உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்தல்.
- 2030 ஆண்டாகும்போது பாலின (பெண் -ஆண்) சமத்துவத்தை அடைந்துக்கொள்ளும் நோக்கத்துடன் வழங்குநர்களின் (பெண் வழங்குநர்களின்) மொத்த எண்ணிக்கையை 50% ஆல் விருத்தி செய்தல்.
- மாற்றுத் திறனாளிகளை ஊக்குவிக்கும் பொருட்டு 2030 ஆகும்போது வழங்குநர்களின் (விசேட தேவை உள்ளவர்களது) எண்ணிக்கையை 25% ஆல் விருத்தி செய்தல்





உள்நாட்டு கைப்பணிகள் உற்பத்தியாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடன், 1964 ஆம் ஆண்டில் லக்சல நிறுவனம் தாபிக்கப்பட்டதுடன், 1982 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் சட்டத்தின்கீழ் இலங்கை கைப்பணி கைத்தொழிற் சபையாக அதனை தாபிக்கப்பட்டது. இத் துறையில் தற்போது லக்சல நிறுவனமானது அரசாங்கத்திற்குரிய மிக பழமையானதும் பெரியதுமான வலையமைப்பாகி உள்ளது.

## விநியோக வலையமைப்பு


இந்த நிறுவனத்தின் விநியோக வலையமைப்பானது, காட்சிகூடங்களில் சந்தைப்படுத்துவதற்கு தேவையான பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுப் பொருட்களை கொள்வனவு செய்தல், குறித்த பொருட் உற்பத்தியை திட்டமிடல், தரக் கட்டுப்பாடு மற்றும் நவீன வடிவமைப்புகளை வழங்குதல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு இறுதியில் செயலூக்கமிக்க விநியோகஸ்தர்களின் எண்ணிக்கை 797 ஆனதுடன், முழுமொத்த உள்நாட்டு கைப்பணி கலைஞர்களின் எண்ணிக்கை இவ்வாண்டில் மேலும் விருத்தியடைந்துள்ளதுடன், புதிய சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவதன் ஊடாக புதிய உற்பத்தியாளர்கள் இத்துறையினை அணுகுவதற்கு வாய்ப்புகளை விரிவாக்கப்பட்டுள்ளன.

<u>நிதி செயலாற்றுகை சாராம்சம்</u>

2019 மீளாய்வு ஆண்டில் ரூபா. 617,296,345.00 ஆன மொத்த வருவாய் தொகையினை லக்சல பதிவு செய்துள்ளதுடன், அதன் விற்பனை செலவினம் ரூபா 258,401,407.00 ஆகும். பின்வரும் வரைப்படம் மூலம் கடந்த ஐந்தாண்டு காலப் பகுதியில் லக்சலவில் மொத்த விற்பனைகளின் சாராம்சம் சமர்ப்பிக்கப்படுகிறது.





2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளை ஆய்வு செய்கையில் ரூபா. 265,742,091.00 ஆன பெறுமதியினை பதிவு செய்துள்ளதுடன், தும்முள்ள கண்காட்சிகூடத்தில், காட்சிகூட விற்பனைக்கு பிரதானமாக பங்களிப்புச் செய்துள்ளதுடன், ரூபா. 76,213,119.00 ஆன விற்பனை பதிவு செய்து நூதனச்சாலைகள் கண்காட்சிகூடம் அடுத்ததாக தமது பங்களிப்பை வழங்கியுள்ளது.





**<u>கொள்வனவு தொடர்பான ஆய்வு</u>**

2019 ஆம் ஆண்டில் லக்சல மூலம் ரூபா .313,668,623.00 பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பின்வரும் வரைப்படம் மூலம் கடந்த 05 ஆண்டு காலப் பகுதியில் வியாபார கொள்வனவுகளின் போக்கு தொடர்பாக காண்பிக்கப்படுகிறது.




பின்வரும் வரைப்படத்தில், 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த உருப்படிகள் தொடர்பாக வகைப்படுத்தலுக்கமைவாக அவதானிக்கப்படுகிறது. 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு

ஆய்வுகளின்போது வியாபார கொள்வனவுகளில் அதிகூடிய சதவீதம் கலை மற்றும் கைவினைத் துறை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.





**செலவின ஆய்வு**


2019 ஆம் ஆண்டில் செலவினங்களை குறைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை பின்பற்றியதால், மொத்த செலவினம் ரூபா.420 மில்லியன் வரை குறைக்கப்பட்டதுடன், அது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.3% ஆன வெற்றியாகும்.

| செலவினம் | 2018 | 2019 |
|---|---|---|
| நிருவாக செலவினம் | 313,643,115 | 292,262,229 |
| விநியோக செலவினம் | 56,287,682 | 53,802,840 |
| நிதிசார் செலவினம் | 51,289,163 | 74,588,320 |
| வரி | 5,149,100 | - |
| | ***426,369,060*** | ***420,653,389*** |

பின்வரும் வரைப்படங்கள் மூலம் முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒட்டுமொத்த செலவினங்களின் அமைப்பு பின்வருமாறாகும்.



செலவின பகுப்பாய்வு
0%
18%
1%
12%
13%
13%
74%
69%
Administrative expenses
Distribution expenses
Finance cost
Tax

350,000,000
300,000,000
250,000,000
200,000,000
150,000,000
100,000,000
50,000,000
-
Administrative expenses
Distribution expenses
Finance cost
Tax
Y2018
Y2019

## செயலாற்றுகை மீளாய்வு

### பின்னணி

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல 2019 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பான மீளாய்வினை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன். உள்நாட்டு கைப்பணிகள் படைப்பாளர்களுக்கு உள்நாட்டு வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன், லக்சல நிறுவனம் 1964 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், 1982 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவையுடன் இணைந்த நிறுவனச் சட்டத்தின் கீழ் இலங்கை கைப்பணிகள் சபையாக தாபிக்கப்பட்டுள்ளது. தற்போது லக்சல இத் துறையில் அரசாங்கத்திற்குரிய பழமையானதும் மிகப் பெரிய விற்பனை வலையமைப்பாகவும் காணப்படுகிறது.

### மூலோபாய அணுகுமுறை

ஆரம்பிக்கப்பட்ட மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக தமது விற்றுமுதல், இலாபம் மற்றும் குறித்த துறையில் நிலையான நிலைப்பாட்டுக்கு தேவையானதும் அத்தியாவசியமானதுமான, வாடிக்கையாளர்களை மனம் கவரச் செய்தல் ஆகிய துறைகளை மேம்படுத்திக் கொண்டுள்ளதுடன், தேவைகளுக்கும் வேண்டுகோள்களுக்கும் பொருந்துகின்ற வகையில் மேற்கொண்ட நடவடிக்கைகளை மேலும் வலுவூட்டப்பட்டது. அதாவது,

- தமது சந்தைப்படுத்தல் பொருட்களின் வகுதிகளை விரிவாக்கப்பட்டு புதிய சந்தையினை அடைந்துக்கொள்ளுதல்.
- தரஅடையாளம் (Branding) செயன்முறை ஊடாக நிறுவனப் பெயரை சந்தையில் நிலைநாட்டுதல்
- வாடிக்கையாளர் நட்பு சேவைக்குத் தேவையான வகையில் ஊழியர்களிடையே ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை கட்டியெழுப்புதல்
- இணையத்தளம் ஊடாக லக்சல பொருட்களை கொள்வனவு செய்கின்ற வசதிகளை மேலும் விஸ்தரித்தல் (Online sales Facilities )
- இலங்கை சுற்றுலாச் சபை, இலங்கை சுற்றுலாத் துறை மேம்பாட்டு பணியகம் போன்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் சுற்றுலா நிறுவனங்களுடன் தொடர்ச்சியாக உறவை பராமரிப்பதன் மூலம், லக்சல காட்சிகூடத்திற்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்.

லக்சல வர்த்தகபெயரின் கீழ் அறிமுகப்படுத்திய லக்சல காட்சிகூடங்களில் சந்தைப்படுத்தப்படுகின்ற எல்லா பொருட்களின் வரம்புகளையும் மேலும் விரிவாக்கப்படுவதுடன், அவை தரமான மற்றும் உயர்தர பரிசுகளையும் நினைவுச்சின்னங்களையும் கொண்டதாக உள்நாட்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு இலகுவாக பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் அத்துடன் விரிவாக்கப்படும். அதற்கமைவாக மிக உயர் தரத்திலான நவீன வடிவமைப்புகளுடன் கூடிய சிறந்த பல பொருட்களை சந்தைப்படுத்தல் பொருட்டு காட்சிப்படுத்தப்பட்டன. மேலும், லக்சல இலங்கையின் பரிசு பொருட்களையும் நினைவுச் சின்னங்களையும் சந்தைப்படுத்தும் ஒரே அரசு மற்றும் பிரதான வர்த்தக நிறுவனமாக உள்நாட்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் மனதில் நிலைநிறுத்துவதற்கு தேவையான சந்தைப்படுத்தல் பணிகளை விரிவாக்கப்பட்டு, வாடிக்கையாளர்களை நிறுவனத்தின் மீது ஈர்ப்பதற்கும் தக்கவைத்துக்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## தரஅடையாளம் ஊடாக நிறுவனத்தின் பெயரை சந்தையினுள் நிலைப்படுத்தல்.

தற்கால சந்தையின் தேவைகளுக்கு ஏற்ப லக்சல தனது காட்சிகூடங்களை உயர் தரத்திற்கு கொண்டு வந்துள்ளது. அதற்கமைவாக லக்சல காட்சிகூடங்களை நவீனமயப்படுத்தி உள்நாட்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வகையில் உயர் தரத்திலான வடிவமைப்புகளுடன், லக்சல வர்த்தகபெயரின் கீழ் உற்பத்திகளை அறிமுகப்படுத்தி பொருட்கள் காட்சிப்படுத்தலை உயர்மட்டத்தில் பராமரிப்பதற்கும் தரஅடையாளத்தின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட விற்பனை இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## ஒரு நட்பு வாடிக்கையாளர் சேவைக்கு தேவையான வகையில் பணியாளர்களிடம் ஆக்கப்பூர்வமான உளப்பாங்கினை கட்டியெழுப்புதல்.

வாடிக்கையாளர்களின் தேவைகளை அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு நட்புடன் கூடிய சிறந்த சேவையினை வழங்குவதற்கும், புதிய சந்தைக்கு ஏற்ற வகையில் பணியாற்ற முடியுமான பணியாற்தொகுதியினரை பராமரித்துச் செல்வதற்கும் தேவையான பயிற்சி மற்றும் ஊக்கமளிப்புகள் வாயிலாக அவர்களின் வினைத்தறின் உயர்மட்டத்தில் பேணுவதற்கு பணியாற்றப்பட்டது. அதற்கமைவாக சம்பளம் மற்றும் கொடுப்பனவு என்பன அவர்களின் வினைத்திறன் மற்றும் விளைவுத்திறன் ஊடாக மேற்கொள்வதன்மூலம் அவர்களை ஊக்குவித்தலானது நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு பெரும்பாலும் உதவியாக அமைந்தது.

## உற்பத்திகளின் விரிவாக்கம்

புதிய மூலோபாய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறுவனத்தின் பணிகள் மட்டுமல்லாது தமது வியாபார பொருட்களின் வகுதிகளையும் விரிவாக்குவதற்கு தேசிய வடிவமைப்பு நிலையம், தேசிய அருங்கலைகள் சபை மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுடன் இணைந்து தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. உள்நாட்டு உற்பத்திகளின் தனித்துவத்தை பாதுகாத்துக்கொண்டு தற்கால சந்தையின் தேவைகளுக்கமைவாக புதிய படைப்புகளை உயர் தரத்துடன் நிருமாணிக்கப்பட்டு சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது மேலும், பரிசுப்பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் மட்டுமல்லாது இரத்தினக்கல், ஆபரணங்கள், தேயிலை, மசாலா பொருட்கள், தோல்பொருட்கள், மட்பாண்டங்கள் மற்றும் உள்நாட்டு முகமூடிகள் மற்றும் ஏனைய நினைவுப் பொருட்கள் அறிமுகப்படுத்தியதுடன், லக்சல புதிய படைப்புப் பிரிவு மூலமும் புதிய கைப்பணி உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக பரிசு பொருட்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் துறையில் புதிய பல படைப்புகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# நிருவாகம்

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல நிறுவனம் அதன் முழுமொத்த தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்கு ஏற்புடையதான சட்ட திட்டங்கள், அரசாங்கத்தின் சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய நிதி மற்றும் நிருவாக ஆலோசனைகளை பின்பற்றி தமது செயற்பாடுகளை நிறைவேற்றியுள்ளதுடன், நல்லாட்சி மற்றும் பெறுகை வழிகாட்டல்களை உரியவாறு பின்பற்றியுள்ளதாக சான்றுப்படுத்தப்படுகிறது. அமைப்பின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்துக்கொள்ளும்போதும் ஏனைய உதவி சேவைகளை வழங்கும்போதும் நிறுவனத்தின் நிருவாகம் மற்றும் மனிதவள பிரிவு என்பன முகாமைத்துவம் தொடர்பாக முக்கியமான கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றியுள்ளன. மீளாய்விற்கான ஆண்டில் நிறுவனத்தின் பதவியணி **129** பேர்களை கொண்டமைந்திருந்ததுடன், அது தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

2019/12/31 அந் திகதியில் மொத்த பணியாற்தொகுதி

| | | |
|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 09 | |
| இடைநிலை மட்டம் | 08 | |
| மூன்றாம் நிலை மட்டம் | 56 | |
| ஆரம்ப மட்டம் | 10 | 83 |
| | | |
| ஒப்பந்த பணியாற்தொகுதி | | 46 |
| மொத்த எண்ணிக்கை | | 129 |

முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் பணியாற்தொகுதியின் நிலைமை 135 தொடக்கம் 129 வரை குறைந்துள்ளதாக அறியலாம். போட்டியுடன்கூடிய விற்பனை சூழலில் சிறப்பான வகையில் தயாரிக்கப்பட்ட குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்டகால வியாபார திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டான முயற்சியின்போது, நன்கு பயிற்சி பெற்ற, அர்ப்பணிப்பு மற்றும் வினைத்திறனுடன்கூடிய பணியாற்தொகுதியை கட்டியெழுப்புவதற்கு பாரிய பணியை ஆற்றப்படுகிறது.

சந்தைப்படுத்தல் பணியாற்தொகுதிக்கும் உதவி பணியாற்தொகுதிக்கும் மனம் கவரும் வகையிலான ஊக்குவிப்பு முறையினை அறிமுகப்படுத்துவதன்மூலமும் அவர்களுக்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன்மூலமும் ஊழியர்களின் பண்புசார் தன்மை மற்றும் விளைவுத்திறன் என்பவற்றை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியுடன் நிறுவனத்தின் நிறுவனத்தின் தொழில்பாட்டு நடவடிக்கைகளுக்கு பொருந்துகின்ற வகையில் புதிய பணியாற்தொகுதியினரை அங்கிகரித்தக்கொள்வதற்கு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் ஏப்ரல் 21 ஆந் திகதியில் பயங்கரவாதிகளால் மேற்கொண்ட பாஸ்கு குண்டு தாக்குதல் காரணமாக நாட்டுக்கு வருகை தருகின்ற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பெரும்பாலும் குறைவடைந்ததடன், அதன் காரணமாக திட்டமிடப்பட்டிருந்த சந்தைப்படுத்தல் இலக்குகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு சிரமமாகியதால் வருமானம் உருவாக்குவதற்கு முடியவில்லை.

ஆயினும் 2020 ஆம் ஆண்டில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை சிறப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுவதால், புதிய திட்டத்தின் கீழ் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகளை மேலும் விருத்தி செய்வதற்கான அனைத்து உபாயமுறைகளையும் செயற்படுத்தி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## இலங்கை கைப்பணிச் சபை – லக்சல பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள்.

| பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் | பதவி | நியமனத் திகதி |
| --- | --- | --- |
| திரு.சுஜிவ பல்லயகுருகே | தலைவர் | 31/12/2020 |
| திருமதி.ஐ.ஜே.அபேரத்ன | சபை உறுப்பினர் | 30/04/2019 |
| திரு.மாத்தரகே நயனசந்திர | சபை உறுப்பினர் | 10/08/2018 |
| திரு.ஜீ.டி.எஸ்பீ குமார | சபை உறுப்பினர் | 29/08/2018 |
| திரு.ஏ.ஏ.ஏ.ருவாயிஸ் | சபை உறுப்பினர் | 18/10/2018 |
| திரு.எச்.எம்.எம்.ரூவாயித் | சபை உறுப்பினர் | 19/10/2018 |
| கலாநிதி திரு.எம்.எம்.வசீர் | சபை உறுப்பினர் | 21/03/2018 |
| திரு.எம்.ஹம்ஸா | தலைவர் (விலகிய) | 13/07/2018 |
| | | (விலகிய திகதி) |
| திரு.எம்.ஹம்ஸா தலைவர் | | **10/10/2019** |
| திரு. ஹர்ஸ விஜேவர்தன சபை உறுப்பினர் | | **29/04/2019** |

## இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல

## சிரேட்ட முகாமைத்துவ குழு

| | |
|---|---|
| திரு.மதுரத சில்வா | பணிப்பாளர் நாயகம்/பிரதான நிறைவேற்று அதிகாரி |
| திரு.சீ.என்.தஹநாயக்க | பணிப்பாளர் (மனித வளங்கள்/நிருவாகம்) |
| திரு.கே.சீ.ஜயவர்தன | பணிப்பாளர் (விற்பனை) |
| ஈ.எலன் தெலில்கன் | பதில் கடமையாற்றும் பணிப்பாளர் (நிதி) |
| திரு.கே.பீ.பீ.எஸ்.கே.பத்திரண | பிரதான உள்ளக கணக்காய்வாளர் |
| திருமதி தேவிகா குமாரி அத்துகோரள | பிரதி பணிப்பாளர் (விநியோகம்) |
| திருமதி விஜிதா சமரரத்ன | பிரதி பணிப்பாளர் (பெறுகை) |
| திரு.சம்பத் செனெவிரத்ன | உதவிப் பணிப்பாளர் (மனித வளங்கள்/நிருவாகம்) |
| திரு.தினேஷ் அபேகோன் | தகவல் தொல்நுட்ப பிரிவின் தலைவர் |
| திரு.ஏ.எல்.எம்.ரிஸ்வான் | உதவிப் பணிப்பாளர் (வருமானம் மற்றும் செலவினம்) |

## எமது நன்றி

எல்லாவற்றுக்கும் முதலாக நான் லக்சல நிறுவனம் சார்பாக, இலங்கை சனநாயக, சோசலிசக் குடியரச மேண்மைதங்கிய சனாதிபதி அவர்களுக்கும், கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கும், கௌரவ கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள், நீண்டகாலம் இடம் பெயர்ந்தவர்களை மீள குடியமர்த்தல், கூட்டுறவு அபிவிருத்தி, தொழில்சார் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் அவர்களுக்கும் பிரதி அமைச்சர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். எமது நிறுவனம் இத் துறையில் உயர்ந்த நிலையினை எட்டுவதற்காக எப்போதும் தேவையான தீர்மானங்கள் மற்றும் முடிவுகள் வழங்குதல் தொடர்பில் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், தேவையான எல்லா சந்தர்ப்பங்களிலும் எமது நிறுவனத்தின் முன்னேற்றம் கருதி வழங்கிய ஒத்துழைப்பு பொருட்டு நான் எமது அமைச்சின் செயலாளருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிறுவனத்தின் நிருவாக, நிதி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மிக நன்றாக நிறைவேற்றும் வகையில் எமது பணியாற்தொகுதியின் உறுப்பினர்களையும், ஒட்டுமொத்த பணியாற்தொகுதியினரையும் சிறந்த முறையில் வழிநடாத்தியமை தொடர்பில் நான் அனைத்து பிரிவுகளின் தலைவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். நிறுவனத்தில் வியாபார நடவடிக்கைகளை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் பேணிச் செல்வதற்கு அவர்களின் வழங்கிய ஒத்துழைப்பு அளப்பரியதாகும்.

எம்முடன் இணைந்துக்கொண்டு வாடிக்கையாளர்களின் தேவைகளை சரியாக அடையாளம் காணப்பட்டு, புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தியும், சம்பிரதாய மற்றும் புதிய உற்பத்திகள் அடங்கலாக கைவினை மற்றும் நினைவு பொருட்களை வழங்கியும் எம்முடன் இணைந்துக்கொண்ட உற்பத்தியாளர்களுக்கு இதன் போது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எமது நிறுவனத்தின்மீது நம்பிக்கை வைத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாண்டில் ஏப்பிரல் 21 ஆந் திகதி நிகழ்ந்த பாஸ்கு தாக்குதல் காரணமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தராமையால் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் வருமானம் துரிதமாக வீழ்ச்சியடைந்தது. ஆகையால் சந்தைப்படுத்தல் இலக்குகளை அடைவதற்கு இவ்வாண்டில் இயலாது போயினும், 2020 ஆம் ஆண்டில் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகளை மேலும் விருத்தி செய்வதற்கு தேவையான நிபுணத்துவ சேவைகளை பெற்றுக்கொண்டு நிறுவனத்தின் சந்தைப்படுத்தலை விரிவாக்குவதற்கு எதிர் பார்க்கின்றேன்.

எதிர் காலத்தில் இலங்கையின் கிராமிய பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கும், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எமது நிறுவனம்மூலம் மேற்கொள்ளப்படும் என்பதை அறிய தருவதுடன், எதிர்வரும் ஆண்டுகளில் எமது விற்பனை ரூபா.பில்லியன் வரை விருத்தி செய்வதற்கு எதிர் பார்க்கப்படுவதாகவும் இறுதியாக கூறுகின்றேன்.

மேலும், நிறுவனத்தின் மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் என்பவற்றை முறையாக முகாமைத்துவம் செய்வதன்ஊடாக ஒட்டுமொத்த பணியாற்தொகுதியிலும் வினைத்திறன் மற்றும் பயனுள்ள பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட முலோபய திட்டத்தின் பிரகாரம், நிறுவனத்தின் பொது செய்றபாடுகளின் செலவுகளை கவனத்தில் கொள்ளக் கூடிய வகையில் குறைத்து 2020 ஆம் ஆண்டில் எமது இலாப சதவீதம் விருத்தியடைகின்ற நிலையில் பேணிச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தலைவர்,

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல

LAKSALA

STATE GIFT & SOUVENIR BOUTIQUE

# இலங்கை கைப்பணிகள் சபை

# நிதிக் கூற்றுகள்

# 2019 திசெம்பர் 31

**இலங்கை கைப்பணிகள் சபை**
**2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக**
**விரிவான வருமானக் கூற்று**

| | குறிப்பு | 2019 | 2018 |
|---|---|---|---|
| | | | ரூபா |
| **வருமானம்** | **3** | 617,296,345 | 737,283,033 |
| விற்பனை செலவு | | (258,401,407) | (306,324,003) |
| **மொத்த இலாபம்** | | **358,894,938** | **430,959,030** |
| அளிப்பு கிடைக்கப்பெறுதல் | | 150,000,000 | - |
| ஏனைய வருமானம் | **4** | 10,806,240 | 11,851,544 |
| நிருவாக செலவினம் | | (292,262,229) | (313,643,115) |
| விநியோகச் செலவினம் | | (53,802,840) | (56,287,682) |
| **செயற்பாடுகளிலிருந்து உற்பத்தியாகும் நலன்கள்** | | **173,636,109** | **72,879,777** |
| நிதி செலவினம் | **5** | (74,588,320) | (51,289,163) |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | **6** | **99,047,789** | **21,590,614** |
| வரி | **7** | - | (5,149,100) |
| **ஆண்டுக்கான இலாபம்** | | **99,047,789** | **16,441,514** |

பக்க இலக்கம் 09 தொடக்கம் 25 வரையிலான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றில் கட்டாயமான அம்சமாகும். அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ள எண்களின் மூலம் கழித்தல்கள் காட்டப்படுகின்றன.

**இலங்கை கைப்பணிகள் சபை**

**2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக**

**நிதி நிலைமை தொடர்பான கூற்று**

| | குறிப்பு | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 8 | 947,265,898 | 993,113,357 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | 947,265,898 | 993,113,357 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| இருப்பு | 9 | 637,430,580 | 463,384,277 |
| வியாபார மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவைகள் | 10 | 86,360,169 | 108,718,915 |
| பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் | 11 | 28,929,936 | 24,451,300 |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | | 752,720,685 | 596,554,492 |
| **மொத்த சொத்துக்கள்** | | 1,699,986,583 | 1,589,667,849 |
| **உரித்துகள் மற்றும் பொறுப்புகள்** | | | |
| **உரித்துகள்** | | | |
| வெளியீடப்பட்ட மூலதனம் | | 73,628,878 | 73,628,878 |
| மூலதன ஒதுக்கங்கள் | | 510,806 | 510,806 |
| மீள் கணிப்பீட்டு ஒதுக்கங்கள் | | 454,366,157 | 454,366,157 |
| மூலதன அளிப்புகள் | | 103,951,172 | 103,951,172 |
| வருமான ஒதுக்கத்தின் ஏனைய கூறுகள் | 12 | (123,528,974) | (178,017,763) |
| பிடித்து வைத்துக் கொள்ளப்பட்ட உழைப்புகள் | | 104,814,488 | 5,766,701 |
| **மொத்த உரித்துகள்** | | 613,742,527 | 460,205,951 |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | |
| ஓய்வூதிய நலன்களின் பொறுப்புகள் | 13 | 50,896,038 | 44,191,479 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 14 | 74,844,712 | 100,184,713 |
| நீண்டகால கடன் | 15 | 388,650,929 | 164,610,344 |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | 514,391,679 | 308,986,536 |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள் | 16 | 490,309,677 | 524,046,871 |
| செலுத்தப்பட வேண்டிய வருமான வரி | 7 | 25,459,280 | 5,149,100 |
| குறுகிய கால கடன் | 17 | 49,762,719 | 275,388,387 |
| வங்கி மேலதிக பற்று | 18 | 6,320,701 | 15,891,004 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | 571,852,377 | 820,475,362 |
| **மொத்த பொறுப்புகள்** | | 1,086,244,056 | 1,129,461,898 |
| **மொத்த உரித்துகள் மற்றும் பொறுப்புகள்** | | 1,699,986,583 | 1,589,667,849 |

திரு.ஈ.ஏ.டெலிகன்

**பணிப்பாளர் (நிதி) (ப.க)**

கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுகளில் கட்டாயமான அம்சமாகும். இந்த நிதிக் கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பு கூறுகின்றது. பணிப்பாளர் சபையால் நிதிக் கூற்றுகள் அங்கீகரிக்கப்பட்டதுடன், அவர்களின் பொருட்டு 2020 செப்தெம்பர் 22 ஆந் திகதி லக்கல, தும்முல்லவில் நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் கையொப்பமிடப்பட்டது.

| திரு.எஸ்.எம்.கொடிகார<br>**சபை உறுப்பினர்** | திருமதி.என்.பீ.ஏ.ஆர்.ஜயவர்தன<br>**சபை உறுப்பினர்** | திரு.சஜீவ பஸ்லியகுருகே<br>**தவிசாளர்** |
|---|---|---|

பக்க இலக்கம் 09 தொடக்கம் 25 வரையிலான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றில் கட்டாயமான அம்சமாகும். அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ள எண்களின் மூலம் கழித்தல்கள் காட்டப்படுகின்றன.

இலங்கை கைப்பணிகள் சபை
2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக
நிதி நிலைமை தொடர்பான கூற்று

| | வெளியிடப்பட்ட மூலதனம் | மூலதன ஒதுக்கங்கள் | மீள்கணிப்பீட்டு ஒதுக்கங்கள் | மூலதன அளிப்புகள் | பிடித்து வைத்துக் கொள்ளப்பட்ட உழைப்புகள் | முன்னரான ஆண்டின் சீராக்கம் | மொத்த உரித்துகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **2018** சனவரி 01 ஆந் திகதியில் மீதி | 73,628,878 | 510,806 | 454,366,157 | 103,951,172 | (10,674,814) | (38,180,995) | **583,601,204** |
| | | | | | | | - |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | - | - | 16,441,514 | | **16,441,514** |
| | | | | | | | - |
| முன்னரான ஆண்டின் பிழைகளில் ஆரம்ப மீதி | | | | | | (139,836,768) | **(139,836,768)** |
| முன்னரான ஆண்டின் பிழைகளுக்கான சீராக்கங்கள் | - | - | - | - | | | - |
| | | | | | | | - |
| **2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி** | **73,628,878** | **510,806** | **454,366,157** | **103,951,172** | **5,766,700** | **(178,017,763)** | **460,205,950** |
| | | | | | | | - |
| ஆண்டுக்கான இலாபம் | | | | | 99,047,789 | | **99,047,789** |
| | | | | | | | - |
| முன்னரான ஆண்டின் பிழைகளுக்கான சீராக்கங்களின் அளிப்புகள் | - | - | - | - | | 54,488,789 | **54,488,788** |
| | | | | | | | - |
| **2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி** | **73,628,878** | **510,806** | **454,366,157** | **103,951,172** | **104,814,488** | **(123,528,974)** | **613,742,527** |

பக்க இலக்கம் 09 தொடக்கம் 25 வரையிலான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றில் கட்டாயமான அம்சமாகும். அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ள எண்களின் மூலம் கழித்தல்கள் காட்டப்படுகின்றன.

இலங்கை கைப்பணிகள் சபை

2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக

காசுப் பாய்ச்சல் கூற்று

| | குறிப்புகள் | 2019 | 2018 |
|---|---|---|---|
| **தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உற்பத்தியாகிய காசுப் பாய்ச்சல்கள்** | | ரூபா | ரூபா |
| வரிக்கு முன்னரான இலாபம் | | **99,047,789** | **21,590,614.00** |
| **சீராக்கல்** | | | |
| சொத்துக்களை அகற்றல் வருமானம் | | (127,716) | - |
| சுயவிருப்ப ஓய்வூதிய திட்டத்தின்கீழ் கடன் தீர்ப்பு கட்டணங்கள் | | 2,465,874 | 3,278,092.00 |
| ஓய்வூதிய நலன்களின் பிணைப்புகள் | | 6,964,310 | 6,704,212.00 |
| வட்டி செலவினம் | | 74,236,920 | 51,289,163.00 |
| தேய்மானம் | | 25,928,260 | 24,329,921.00 |
| மூலதன செலவினத்தை கடன் தீர்ப்பு செய்தல் | | 25,340,000 | 25,340,000.00 |
| முன்னரான ஆண்டின் சீராக்கல் | | (77,794,472) | (7,553,507.00) |
| கடன் தீர்ப்பு அளிப்புகள் | | (25,340,000) | (25,340,000.00) |
| | | **130,720,965** | **99,638,495.00** |
| **செயற்பாட்டு மூலதனத்தின் மாற்றங்கள்** | | | |
| இருப்புகள் | | (41,763,042) | (16,718,542.00) |
| வியாபாரம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவைகள் | | 19,892,872 | 84,467,185.00 |
| வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள் | | (11,905,275) | (28,819,050.00) |
| **தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உற்பத்தி செய்த காசுப் பாய்ச்சல்** | | **96,945,520** | **138,568,088.00** |
| சுயவிருப்ப ஓய்வூதிய திட்டத்திற்கு செலுத்தல் | | | - |
| பணிக்கொடை செலுத்தல் | | (573,540) | (574,994.00) |
| வட்டி செலுத்தல் | | (74,236,920) | (51,289,163.00) |
| **தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உற்பத்தியாகிய தேறிய காசுப் பாய்ச்சல் கூற்று** | | **22,135,060** | **86,703,931.00** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உற்பத்தியாகிய காசுப் பாய்ச்சல் கூற்று** | | | |
| சொத்துக்கள் அகற்றல் வருமானம் | | 164,256 | - |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் | | (6,665,294) | (2,117,152.00) |
| **முதலீட்டு செயற்பாடுகளின் பொருட்டு செலவிடப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(6,501,038)** | **(2,117,152.00)** |
| **நிதி செயற்பாடுகளில் இருந்து உற்பத்தியாகிய காசுப் பாய்ச்சல்** | | | |
| நீண்டகால கடன் எடுத்தல் | | 273,000,000 | 15,824,872.00 |
| கடன் மீள செலுத்தல் | | (274,585,083) | (72,254,789.00) |
| **நிதி செயற்பாடுகளுக்கு செலவிடப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(1,585,083)** | **(56,429,917.00)** |
| **பணமும் பணத்திற்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பும்/(குறைவடைதலும்)** | | **14,048,939** | **28,156,862.00** |
| ஆண்டு ஆரம்பத்தின் பணமும் பணத்திற்கு சமமானவைகளும் | | 8,560,296 | (19,596,566.00) |
| **ஆண்டு இறுதியில் பணமும் பணத்திற்கு சமமானவைகளும்** | | **22,609,235** | **8,560,296.00** |
| வங்கி மேலதிக பற்று | 18 | (6,320,701) | (15,891,004.00) |
| கையிருப்பு மற்றும் வங்கியில் உள்ள பணம் | 11 | 28,929,936 | 24,451,300.00 |
| | | **22,609,235** | **8,560,296.00** |

பக்க இலக்கம் 09 தொடக்கம் 25 வரையிலான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றில் கட்டாயமான அம்சமாகும். அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ள எண்களின் மூலம் கழித்தல்கள் காட்டப்படுகின்றன.

## இலங்கை கைப்பணிகள் சபை
## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 1. நிறுவனத் தகவல்கள்

#### 1.0 கம்பனி

''லக்சல'' எனும் வர்த்தக குறியீட்டின் கீழ் பிரசித்திபெற்று செயற்பட்டுவரும் இலங்கை கைப்பணிகள் சபை (''இலங்கை கைப்பணிகள் சபை'' அல்லது ''லக்சல'') இலங்கை முழுவதும் தயாரிக்கப்படுகின்ற கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபடும் ஒரே அரச நிறுவனமாகும்.

#### 1.1 பிரதான நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் இயல்பு

சபையின் பிரதான தொழில்பாடு யாதெனில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்கு பரிசுப் பொருட்களையும் நினைவுப் பொருட்களையும் விற்பனை செய்வதாகும்.

### 2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 2.0 அளவீட்டின் அடிப்படை

2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான சபையின் கணக்கு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் (நிதிக் கூற்று) உட்பட அதன் நிதி நிலமை தொடர்பான கூற்று, விரிவான வருமானக் கூற்று, பங்கு முதலீடுகளின் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்டுள்ளன.

பொதுவான மதிப்பின் பிரகாரம் அளவீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தவிர்ந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு சில குறிப்பிட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளை பயன்படுத்துவதற்கு அவசியம் ஏற்படுகின்றது. இந்த நிதி கூற்றுக்கள் இலங்கை ரூபாய் பெறுமதிக்கு அமைய முன்வைக்கப்பட்டுள்ளது.

#### 2.1 கணக்கீட்டு மதிப்பீடுகள், கருதுகோள்கள் மற்றும் முடிவுகள் செயற்படுத்தல்

கொள்கைகளை பயன்படுத்துவது தொடர்பாகவும் சொத்துக்கள் பெறுப்புக்கள் தொடர்பாகவும் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பாகவும் கிடைக்கப்பெற்ற கணக்குகளின் அளவுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் முடிவுகளுக்கு, மதிப்பீடுகளுக்கு மற்றும் எடுகோள்களுக்கு வருவதற்கு

முகாமைத்துவத்திற்கு தேவையான இலங்கை கணக்கீட்டு தரங்களுக்கு ஏற்ப நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது சிறந்ததாகும். இந்த மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் நிலவிய சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதென நம்பிக்கை கொள்ளும் வரலாற்று ரீதியான அனுபவங்கள் மற்றும் பல்வேறுபட்ட காரணிகள் மீது அமைந்துள்ளது. அதன் பெறுபேறுகள் ஏனைய மூலாதாரங்களிலிருந்து தெளிவாக மாறுபடாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை முன்னெடுத்துச் செல்லும் பெறுமாணங்கள் மீது தீர்மானமெடுக்கும் அடிப்படையில் அமைக்கப்படுகின்றது. உண்மையான பெறுபேறுகள் இந்த மதிப்பீடுகளிலிருந்து மாறுபடக்கூடும். மதிப்பீடுகள் மற்றும் விசேட கருதுகோள்கள் நிலவும் அடிப்படையின் மீது மீளாய்வு செய்யப்படும். மதிப்பீடுகள், கணக்கு வைக்கும் திருத்தங்கள் என்பன மதிப்பீடுகள் திருத்தப்படும் போது இனம் காணப்படும். அவ்வாறு செய்வதன் மூலம் அத்தகைய திருத்தங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது திருத்தப்படும் காலத்திற்கு மாத்திரம் தாக்கத்தைச் செலுத்தக்கூடியதாக இருப்பின் மாத்திரம் அத் திருத்தம் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

## 2.2 நிலையானயான இறுப்பை நிச்சயித்தல்

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கின்ற போது எதிர்காலத்தின் நிலையான இருப்பை மென்மேலும் தக்கவைத்துக் கொள்வதற்கு சபையினது சொத்துக்களின் மதிப்பீடொன்று எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்கால தகவல்கள் அனைத்தையும் கருத்திற்கொள்ளும் போது வியாபாரத்தை மூடிவிடுவதற்கோ அல்லது நிறுத்துவதற்கோ நாம் எதிர்வுகூறமாட்டோம்.

## 2.3 ஒப்புநோக்கப்படட தகவல்கள்

சபையினால் கணக்கீட்டுக் கொள்கைகள் சமமான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, முன்னைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட கொள்கைகளுக்கும் ஏற்புடையதாவதுடன், அவற்றை நியாயமாக முன்வைப்பதற்கு தேவையான சந்தர்ப்பங்களில் மீள்வகையீடு செய்யப்பட்டுள்ளன.

## 2.4 விசேட கணக்கியல் கொள்கைகளின் சாரம்

பின்வரும் கணக்கியல் கொள்கைகள் இந்த நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படும் எல்லா காலவெல்லைகளுக்கம் தொடர்ச்சியாக இயைபுடையதாக்கிக் கொள்ளப்பட்டுள்ளதோடு அவற்றை பணிப்பாளர் சபையினாலும் மிக சாமர்த்தியமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 2.4.1 வருமானத்தை இனம்காணல்

பொருளாதார நலன்கள் வியாபார நிறுவனத்தை நோக்கி வரும் என அனுமானித்தும், அந்த வருமானம் நம்பிக்கைத் தரக்கூடிய வகையில் அளவீடு செய்ய முடியும் எனவும் கருத்திற்கொண்டு வருமானம் இணங்காணப்படுகின்றது. பெறப்பட்ட அல்லது வருமதியாக உள்ள தொகை அடிப்படையில் சாதாரணப் பெறுமதிக்கு வருமானம் மதிப்பீடு செய்யப்படுகின்றது. அன்றேல் அது வியாபாரக் கழிவுகள் மற்றும்

ஏற்புடைய வரி சேர்க்கப்படாத கிடைக்க வேண்டிய வருமதிகள் என கணக்கிடப்படும்.

வெளிநாட்டு நாணயங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் கட்டுப்படுத்தப்படும் நாணயமாற்றுக் கொள்கையின் அடிப்படையில் மாற்றப்படும்.

ஐந்தொகை தினத்தில் வெளிநாட்டு நாணயங்கள் அடிப்படையில் வகையீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக அன்றைய தினத்தில் காணப்படும் நாணய மாற்று வீதத்தின் கீழ் இலங்கை ரூபாய்களுக்கு மாற்றீடு செய்யப்படும்.

### 2.4.2 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

(அ) அடையாளம் காணல் மற்றும் அளவிடுதல்

சொத்துக்கள் சார்ந்த எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனியை நோக்கி வரும் என அனுமானித்து மற்றும் சொத்துக்களின் செலவினத்தை நம்பிக்கையுடன் அளவிட முடியும் என்றிருப்பின் மாத்திரம் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் பொறிகளை இனம்காணும் செயன்முறை ஏற்றுக்கொள்ளப்படும்.

காணிகள் தவிர்ந்த சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட குறைபாடுகளின் நட்டங்கள் கழிக்கப்பட்ட செலவுகளின் பெறுமதிக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்துக்களை கைப்பற்றல் தொடர்பான நேரடியாக பிரயோகிக்க முடியுமான செலவுகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. செலவுப் பொருட்கள், நேரடி, உழைப்பு மற்றும் எதிர்பார்க்கப்படும் உபயோகத்திற்காக ஏதேனும் சாதகமான நிலமைக்கு சொத்துக்களை கொண்டு செல்வதற்கு நேரடியாக பிரயோகிக்க முடியுமான ஏதேனும் செலவு மற்றும் அவ்வாறான சொத்துக்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்தளத்தில் உள்ள பொருட்கள் எதனையும் கலற்றி பாகப்படுத்தல் அல்லது அகற்றல் அல்லது அவற்றை மீள்நிலைப்படுத்தல் செலவுகள் சுய நிர்ணய சொத்துக்களுக்குள் அடங்கும். சொத்துகள், ஆலைகள் மற்றும் பொறிகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட ஏதேனுதொரு பொருள் வெவ்வேறான பிரயோசனங்கள் அடிப்படையில் அவற்றின் ஆயுட்காலம் பிரதான பாகங்களோடு தொடர்புபடுகின்ற போது அவை தனியான சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்ற அடிப்படையில் கணக்கிடப்படும்.

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி ஏதேனும் நிகழ்வுகள் அல்லது மறைமுகமான காரணிகளின் வித்தியாசங்களுக்கு அமைய மீண்டும் அறவீடு செய்ய முடியாதென தெளிவாகும் போது அந்த சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் முன்கொண்டு செல்லப்பட்ட பெறுமதி பலவீனமாகக் கருதி மீளாய்வுக்கு உட்படுத்தப்படும்.

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அகற்றலின் போது கிடைக்கப்பெறும் இலாபம் அல்லது நட்டம் அத்தகைய சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்வற்றுக்கு ஏற்புடைய முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி மற்றும் அதன் அகற்றலின் மீது பணத்தொகையுடன் சீறாக்கம் செய்து உறுதிப்படுத்திக் கொள்வதோடு அவை விரிவான வருமான கூற்றில் அடையாளம் காணப்படும்.

**(ஆ) தேய்மானம்**

தேய்மானத்திற்கான ஒதுக்கீடுகள் கணக்கிடப்படுவது, ஏற்புடைய கணக்கு பெறுமதிகள் அவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட ஆயுட்காலம் முழுவதையும் வெட்டிவிடும் நோக்கத்துடன் சொந்தமான காணிகள் தவிர்ந்த ஏனைய சகல சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் செலவுகளின் மீது எளிமையான நேர்கோட்டு வழிமுறையை கையாண்டேயாகும்.

பயன்படுத்தப்பட்ட பிரதான வருடாந்த வீத அளவுகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | கட்டிடம் | 2.5% |
| 2. | இயந்திரங்களும் உபகரணங்களும் | 10% |
| 3. | பதியப்பட்டுள்ள பொருட்கள் | 10% |
| 4. | தளபாடங்களும் பொருத்திகளும் | 10% |
| 5. | கணினி வன் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | 20% |

(இ) **சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை விற்பனை செய்ததன் மூலம் கிடைக்கப்பெற்ற இலாபம் / நட்டம்**

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை அகற்றுதல் மூலம் கிடைக்கப்பெறும் இலாபம்/நட்டம் என்பவற்றை ஏற்புடைய விற்பனை நிகழும் காலப்பிரிவில் இனங்காணப் படுவதோடு வேறு செயற்பாட்டு வருமானங்களின் கீழ் வகையீடு செய்யப்படும்.

### 2.4.3 மேற்கொள்கின்ற மூலதன வேலைகள்

வருடத்திற்குள் பூரணப்படுத்தாத மூலதன செலவுகள் முற்பண கொடுப்பனவுகளாக குறிப்பிடப்படுவதோடு, வருடத்தினுள் நிறைவு செய்யப்பட்ட பயன்பாட்டுக்கு எடுத்துக்கொண்ட மூலதனச் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரண கணக்கிற்கு மாற்றப்படும்.

### 2.4.4 புலனாகாத சொத்துக்கள்

சபையினால் கைப்பற்றப்பட்ட பிரயோசனமான நிலையான ஆயுட் காலத்தைக் கொண்ட புலனாகாத சொத்துக்கள், ஒன்றுதிரட்டப்பட்ட கடன்தீர்ப்பு மற்றும் ஒன்றுதிரட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் நட்டங்களுக்கான செலவுகளின் மீது அளவிடப்படும்.

**(அ) அடையாளம் காணும் அடிப்படை**

புலனாகாத சொத்துக்களை சொத்துக்களுக்காக பிரயோகிக்க முடியுமான எதிர்கால பொருளாதார நலன்கள் வியாபார நிறுவனங்களுக்கு பாய்ச்சப்படும் என்றும் ஏற்புடைய செலவுகள் திரண்ட குறைபாடுகள், நட்டங்கள் குறை செலவுகள் மீது நம்பிக்கையாக அளவீடு செய்து முன்னெடுத்துச் செல்ல முடியுமென அனுமானிக்கும் சந்தர்ப்பங்களிலுமே அடையாளம் காணப்படுகின்றன.

**(ஆ) பிந்திய செலவுகள்**

காலம் கடந்த செலவுகள் மற்றும் குறிப்பிட்ட சொத்துக்களின் எதிர்கால பொருளாதார நன்மைகள் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஏற்புடைய பிந்திய செலவுகள் மூலதனமாக்கப்படுகின்றன. உள்ளக ரீதியாக ஏற்படுத்தப்படும் நற்பெயருக்கு மற்றும் மதிப்புக்கு ஏற்புடைய செலவுகளும் உட்பட பிற அனைத்து செலவுகளும் செய்யப்படும் எனும் கருதுகோளின் அடிப்படையில் வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுகின்றது.

(இ) நீக்கல் மற்றும் அகற்றுதல்

புலனாகாத சொத்துக்களை அகற்றும் போது அல்லது பாவனையின் பின்னர் அகற்றும் போது எதிர்கால பொருளாதார நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாத போது அவை புலனாகாத சொத்துக்கள் என அடையாளம் காணப்படும்.

(ஈ)    கடன் தீர்ப்புச் செய்தல்

புலனாகாத சொத்துக்கள், அவை பாவனைக்கு எடுக்கப்பட்ட தினத்திலிருந்து அவற்றின் மதிப்பீட்டு பிரயோசனமுள்ள ஆயுட் காலத்திற்குள் எளிய நேர்கோட்டு வழிமுறைக்கு அமைய வருமான கூற்றுக்குள் அடையாளம் காணப்படும்.

### 2.4.5 பலவீனங்கள்

சபைக்குள்ள சொத்துக்களை முன்னெடுத்துச் செல்லும் கணக்கு அளவுகள், ஏதேனும் சொத்தில் பலவீனம் அவதானிக்கப்படுகின்றதா என்பதை தீர்மானிப்பதற்கு ஒவ்வொரு ஐந்தொகை தினத்திலும் மீளாய்வு செய்யப்படும். அவ்வாறான பலவீனங்கள் தென்படுமாயின் ஏற்புடைய சொத்திலிருந்து மீள அறவிடமுடியுமான பெறுமதியை மதிப்பீடு செய்யப்படும். ஏதேனும் பலவீன நட்டமொன்று அவதானிக்கப்படுவது ஏதேனும் சொத்தின் கொள்ளளவு பெறுமதி அல்லது அதன் பண உற்பத்தி பிரிவை மீண்டும் அறவிடுவதற்கு முடியுமான பெறுமதியை விஞ்சும் போதாகும். பலவீனங்கள் நட்ட வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும்.

### 2.4.6 வர்த்தக மற்றும் வேறு வருமதிகள்

வர்த்தக மற்றும் வேறு வருமதிகள் பொதுவான வியாபார காலத்திற்குள் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் அல்லது அவர்கள் சார்பில் மேற்கொள்ளப்பட்ட சேவைகளுக்கு கிடைக்க வேண்டியுள்ள பணத்தொகைகளாகும். அவற்றை சேகரித்துக் கொள்வதற்கு ஒரு வருட காலம் அல்லது அதற்கு குறைவாக செலவாகும் என உத்தேசிக்கப்படுமிடத்து (பொதுவான வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகளின் வட்டத்திற்குள் அதற்கு மேலான காலம் செலவாகும் எனின்) அவை நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். அவ்வாறல்லாத போது அவை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வகையீடு செய்யப்படும்.

### 2.4.7 இருப்புகள்

பயன்படுத்தாத மற்றும் பழுதுபார்க்க முடியுமான வகைகளுக்கு ஏற்பாடுகள் செய்த பின்னர் பொருள் பட்டியல் செலவில் ஆகக் குறைந்த விலைக்கு மற்றும் தேறிய கண்டபலன் பெறுமதிக்கு கணக்கிடப்படும். தேறிய கண்டபலன் பெறுமதி (WAC) என்பது சாதாரண வியாபார காலப்பிரிவுக்குள் பொருட்கள் பட்டியலை விற்பனை செய்ய முடியுமான விலை என்பதோடு நட்ட இருப்புக்கள் மற்றும் பழுதுபார்ப்பு இருப்புக்கள், இருப்புக்கள் அட்டவணையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

### 2.4.8 பணமும் பணத்திற்கு சமமானவைகளும்

கையிருப்பு மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றின் பணிகளுக்காக பணப் பெறுமதியை அறிந்துகொள்வதற்கு இலகுவாக மாற்றீடு செய்ய முடியுமான குறுகியகால உயர் திரவத்தன்மையுள்ள முதலீடுகள் கையிருப்பு தொகை மற்றும் பணம் சார்ந்தவைகள் என வரைவிலக்கணம் செய்யப்படும். பணமும் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் என்பது கையிருப்புத் தொகை மற்றும் வங்கி மேலதிகப் பற்று தவிர்ந்த ஏனைய குறுகிய கால கடன் பெறுகைகள் மற்றும் குறுகிய கால முதலீடுகள் என்பன உள்ளடங்கும்.

### 2.4.9 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்று, இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் எல்.கே.ஏ.எஸ். LKAS 07 (காசுப் பாய்ச்சல் கூற்று) ஏற்ப மறைமுகமான பயன்பாட்டின் ஊடாக தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.4.10 ஊழியர் நலன்கள்

#### (அ) குறிப்பிட்ட நலத்திட்டம் - ஓய்வூதிய பணிக்கொடை

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் கீழ் ஓய்வூதிய நலன்களுக்கான முறிகளுக்காக 2018 ஆம் ஆண்டின் காலப் பகுதிக்குள் 164 ஊழியர்களை உள்ளடக்கிய குறிப்பிட்ட நலத்திட்டமாகும். இந்த திட்டத்தின் தேவைப்பாடுகளை நிறைவு செய்யும் பொருட்டு ஆரம்ப வருடத்திலிருந்து முழுமையான ஒவ்வொரு வருடத்திற்கும் சகல ஊழியர்களினதும் நிதி ஆண்டின் இறுதி மாதத்தின் அரைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்ட பெறுமதிக்கு சமமான தொகை ஐந்தொகையில் ஒதுக்கீடொன்றாக முன்கொண்டு செல்லப்படுகிறது. வருட ஆரம்பத்திலிருந்து முன்கொண்டு வந்த ஒதுக்கீடுகளில் ஏற்படும் வித்தியாசத்தின் குறைபாடு தொடர்பாக வருமானக் கூற்றில் நடவடிக்கை எடுக்கப்படும்.

#### (ஆ) குறிப்பிட்ட பங்களிப்புத் திட்டம்

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு உரிமைப் பெறுகின்றனர். ஊழியர்களின் நிகர சம்பளத்தின் அடிப்படையில் 12% உம் சபையினால் 3% ம் என்ற அடிப்படையில் முறையாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு பங்களிப்புச் செய்யப்படும்.

### 2.4.11 கடன் பெற்றுக்கொள்ளல்

கடன் பெறுகைகள் அடிப்படையாக அடையாளம் காணப்படுவது மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் செலவினம் அற்ற பொதுவான மதிப்பின் பிரகாரமாகும். எதிர் வரும் காலத்தில் விளைவுப் பயன் வட்டி முறையைப் பயன்படுத்தி தவணை முறைக் கடன் கரைப்பு செலவு அடிப்படையில் கடன்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற தொகை கொடுக்கல் வாங்கல்களின் செலவினம் தவிர்ந்த மற்றும் விடுவித்துக்கொள்ளும் மதிப்புக்கு இடையில் காணப்படும் ஏதேனும் வித்தியாசம் இருப்பின் அதனை கடன் பெறுகை காலத்திற்குள் வருமான கூற்றில் காட்டப்படும்.

### 2.4.12 பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

கடந்தகால நிகழ்வுகளின் பெறுபேறாக சட்டரீதியான / சம்பிரதாயபூர்வ முறியொன்று நடப்பு வருடத்தில் இருக்கும் போது பொறுப்புக்கள் மற்றும் ஓதக்கீடுகள் என்பன ஐந்தொகையில் இனங்காணப்படும். அவ்வாறான முறிகளை தீர்ப்பதன் மூலம் பொருளாதார நலன்களை உள்ளடக்கிய வளங்கள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடன் தருனர் ஒருவரினால் வேண்டுகோள் விடுக்கப்படும் போது அல்லது ஐந்தொகை தினத்திற்கு ஒரு வருடத்திற்குள்ளோ அல்லது செலுத்த வேண்டிய முறிகள் என்பன ஐந்தொகையில் நடப்பு பொறுப்புக்களாக குறிப்பிடப்படும். ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருடத்திற்கு பின்னர் செலுத்தவேண்டிய பொறுப்புக்கள் ஐந்தொகையில் நடப்பு ஆண்டுக்கான பொறுப்பாக கணிக்கப்படும்.

(அ) வர்த்தக மற்றும் வேறு செலுத்த வேண்டியவைகள்

வர்த்தக செலுத்த வேண்டியவைகளாக சாதாரண வியாபார காலத்திற்குள் வழங்குநர்களுக்கு பொருட்களுக்கு அல்லது அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவை ஒன்றுக்கு செலுத்துவதற்குள்ள பொறுப்புக்களின் பெறுமதியாகும். அவை செலுத்தப்பட வேண்டிய காலம் ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவாக செலவாகும் என உத்தேசிக்கப்படுமிடத்து (பொதுவான வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகளின் வட்டத்திற்குள் அதற்கு மேலான காலம் செலவாகும் எனின்) அவ்வாறு செலுத்தப்பட வேண்டிய கணக்குகள் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படும். அவ்வாறல்லாத போது அவை நடைமுறை சொத்துக்களின் கீழ் வகையீடு செய்யப்படும்.

அனுப்பப்படும் இருப்புக்கள் உள்ளிட்ட அனைத்து கொள்வனவுகளுக்கும் பொருட்கள் கிடைக்கப்பெறுவதை பதியும் போது கணக்கேடுகளில் பொறுப்புக்களை அறிக்கையிடும் கொள்கை லக்சல நிறுவனத்தினால் பின்பற்றப்பட்டுள்ளது. ஆயினும் அனுப்பப்படும் இருப்புக்கள் விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் பொருள் அனுப்பும் கடன்தருநர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும்.

**2.4.13** தற்போதுள்ள வருமான வரி அறவிடுவது கணக்கிடப்படுவது கம்பனியினால் வரி வருமானத்தை செயற்படுத்தி உருவாக்கும் போது கம்பனியின் நிதி நிலமை பற்றிய கூற்றின் திகதிக்கு நாட்டில் அமுலிலுள்ள அல்லது போதியளவு விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைவாகும். பயன்படுத்தப்படும் வரிக் கட்டளைகளின் பொருள்கோடல்களுக்கு உட்பட்ட நிலமைகளுக்கு ஏற்புடையதாக வரி அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் முகாமைத்துவத்தினால் தவணை அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதோடு, வரி அதிகாரபீடங்களுக்கு செலுத்தவேண்டுமென உத்தேசிக்கப்படும் பணத் தொகையின் அடிப்படையில் ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படும்.

### 2.4.14 வருமானங்களை இனம்காணல்

வருமானம் இனம்காணப்படுவது பொருட்கள் விற்பனைக்காக கிடைக்கப்பெற்ற பணத்தின் சாதாரண பெறுமதி வரையிலாகும். அத்தோடு பொருளாதார நலன்கள் இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபைக்கு கிடைக்கும் என்ற அநுமானத்தின் பேரிலாகும். மேலும் வருமானம் மற்றும் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட வேண்டியுள்ள செலவினங்களை நம்பகமான முறையில் கணக்கிட முடியும் என்றிருந்தால் மாத்திரமாகும். வருமானம் கணக்கிடப்படுவது வியாபாரக் கழிவுகள், நலன்கள் மற்றும் ஏற்புடைய வரி தவிர்ந்த கிடைக்கப்பெற்ற அல்லது வருமதியாக உள்ளவற்றை கருத்திற்கொண்டாகும். வருமானத்தை இனம்காணும் பொருட்டு பின்வரும் குறித்துரைக்கப்பட்ட நியதிகளையும் பூரணப்படுத்தல் வேண்டும்.

பொருட்கள் விற்பனை

பொருட்கள் விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானம், பெறப்பட்ட மற்றும் பெறவேண்டிய தேறிய இலாபம், விற்பனை கழிவுகள் மற்றும் கொள்ளளவுகளின் சாதாரண பெறுமதிக்கு அளவிடப்படும். விசேட ஆபத்துக்கள் மற்றும் உரிமை நலன்கள் கொள்வனவு செய்பவருக்கு பொறுப்பளிக்கப்பட்டிருக்கும் போது, அறவிடுவதற்கு முடியுமாக உள்ள போது சார்புச் செலவு மற்றும் பொருட்கள் மீண்டுவரும் அறிக்கைகள் நம்பிக்கையாக மதிப்பீடு செய்ய முடியுமான சந்தர்ப்பத்தில் மற்றும்

பொருட்கள் தொடர்பாக தொடர்ச்சியான முகாமைத்துவ தலையீடு இல்லாத போது வருமானம் அடையாளம் காணப்படும். ஆபத்துக்கள் மற்றும் நன்மைகளைப் பொறுப்பளித்தல் விற்பனை ஒப்பந்தத்தின் ஒவ்வொரு நிபந்தனைகளின் மீதும் தங்கி நின்று மாறுபடுகின்றது.

ஏனைய தொழில்பாட்டு வருமானம்

(அ) சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் இலாப நட்டங்கள்

(ஆ) சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அகற்றுதல் மற்றும் நீக்குவதன் மூலம் கிடைக்கும் இலாபம் அல்லது நட்டங்கள் ஏற்புடைய விற்பனை நிகழும் காலப்பிரிவில் இனம்காணப்படுவதோடு அவை ஏனைய செயற்பாட்டு வருமானங்களாக வகைபடுத்தப்பட்டுள்ளன.

**கிடைக்கப்பெற்ற கொடைகள்**

அரசாங்கத்தினால் வழங்கப்படும் கொடைகள் செலவின விடயத்திற்கு ஏற்புடையதாயின் அது செலவை சீராக்கம் செய்வதற்கு தேவையான காலப்பகுதியில் இழப்பீடு வழங்கப்படும் என்ற அடிப்படையில் இனம்காணப்படும். ஏற்புடைய கொடை சொத்தொன்றுடன் தொடர்புபடுமாயின் சாதாரண பெறுமதி பின்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் உத்தேச நடைமுறைக்கேற்ற ஆயுட்காலம் பூராகவும் சமமான தவணைக் கட்டணங்களில் வருமானக் கூற்றிற்கு செலுத்தப்படும்.

**கிடைக்கப்பெற்ற மூலதனக் கொடைகள்**

கிடைக்கப்பெற்ற மூலதனக் கொடைகள் பின்போடப்பட்ட வருமானங்களாக இனம்காணப்பட்டுள்ளதோடு 10 வருட காலப் பிரிவு பூராவும் கடன்தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற மீண்டுவரும் கொடைகள்

வருமானம் மற்றும் ஏற்புடைய கொடைகள் ‘‘வேறு வருமானங்களாக’’ தனித்தனியாக அறிக்கையிடுவதற்கு அல்லது ஏற்புடைய வருமானங்கள் மூலம் அறவீடு செய்வதற்கும் முடியும்.

### 2.4.15 செலவுகளை இனம்காணல்

நிதிக் கூற்றுக்களில் செலவினங்கள் இனம்காணப்படுவது செய்யப்பட்ட செலவினம் மற்றும் குறிப்பிட்ட வருமான விடயங்களுக்கு இடையிலுள்ள உழைப்புக்கள் ஆகியவற்றுக்கு இடையிலுள்ள நேரடி தொடர்பின் அடிப்படையிலாகும். வினைத்திறனுடனான வியாபாரத்தைப் பேணிவருவம் போதும் சொத்துக்கள் ஆலைகள் மற்றும் பொறிகளை பராமரிக்கின்ற போதும் ஏற்படும் அனைத்து செலவினங்களும் வருமானக் கூற்றில் அறவீடுகளாக காட்டப்பட்டுள்ளது.

வருமானக் கூற்றை சமர்ப்பிக்கும் செயற்பாட்டுக்காக கம்பனியின் மற்றும் குழுமத்தின் செயலாற்றுகைக்கு உரிய அடிப்படைகள் அதன் மூலம் நியாயமாக எடுத்துக்காட்டப்படும் என்ற அடிப்படையில் ‘‘செலவினத்தின் செயற்படுத்தல்’’ முறை பின்பற்றப்பட்டுள்ளது.

**(அ) மீண்டுவரும் செலவுகள்**

வருமான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள படி சபையினால் உழைக்கப்படும் இலாபம் யாதெனில், சகல அறிந்த பொறுப்புக்களுக்காக மற்றும் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் முறையே தேய்வுக்கான ஒதுக்கீடுகளை வழங்கிய பின்னர் மீதமாகும் தொகையாகும்.

**(ஆ) மூலதனச் செலவுகள்**

வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவோ அல்லது வியாபாரத்தின் உழைப்புக் கொள்ளளவை உயர்த்துவதற்கு நிரந்தரமான நிலைமையை கொண்ட சொத்துக்களை விரிவுபடுத்துவதற்கோ அல்லது விருத்தி செய்வதற்காகவோ செலவிடப்பட்ட செலவுகள் மூலதனச் செலவுகளாக கொள்ளப்பட்டுள்ளன.

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை அகற்றும் போது கிடைக்கும் வருமானங்கள் எனும் அடிப்படையில் இலாபம் அல்லது நட்டம் என்ற ரீதியில் வருமான கூற்றினுள் கணக்கிடப்பட்டுள்ளது.

**(ஆ) பின்போடப்பட்ட மேலதிகக் கட்டணச் செலவுகள்**

சபையை மீளமைப்புச் செய்யும் செயன்முறையின் ஒரு பகுதியாக மீளாய்வுக்குரிய வருடத்தினுள் " பொது தொழில்முயற்சிகள் சுற்றிருப இலக்கம் 10 இன் கீழ் சுயவிருப்ப ஓய்வூபெறுகைக்கு ஊழியர்கள் 20 பேர் சம்மதித்தனர். அவர்களுக்காக ரூபா. 10,432,332,25 தொகை செலவிடப்பட்டது. இந்தச் செலவு எஞ்சிய சேவைக் காலத்திற்காகவும் விடப்படுவதற்கு கணக்குக் கொள்கையொன்று பின்பற்றப்பட்டது. அதற்கிணங்க, ஒவ்வொரு ஊழியர்களுக்காகவும் செலவிடப்பட்ட தொகை சமனான அடிப்படையில் அவர்களது சேவைக் காலப்பகுதிக்குள் விரிவடையச் செய்யப்பட்டுள்ளது.

**2.4.16 கடன் பெறுகை செலவுகள்**

கடன் பெறுகைச் செலவுகள் அவை செலவிடப்படும் வருடத்தில் ஒரு செலவாக கணக்கிடப்படும்.

**2.4.17 முறிகள் மற்றும் நிச்சயமற்ற சந்தர்ப்பங்கள்**

சபையின் கட்டுப்பாட்டுக்கு வெளியே நடைபெறும் கடந்தகால நிகழ்வொன்று காரணமாக எழக்கூடிய நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் நிகழுதல் அல்லது நிகழாதிருத்தல் காரணமாக மாத்திரம் உறுதிப்படுத்தப்படும் மறைமுக சொத்துக்கள் மற்றும் முறிகள் நிச்சயமற்ற சந்தர்ப்பங்கள் ஆகின்றன.

**2.4.18 ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் நிகழ்ந்தவை**

ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் நிகழும் சகல குறிப்பிடத்தக்க சம்பவங்களும் ஏற்புடைய சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டு செம்மையாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கருதப்படுகின்றது.

**இலங்கை கைப்பணிகள் சபை**
**நிதி கூற்றுகளுக்கான குறிப்புகள்**

| **3. வருமானம்** | **2019** | **2018** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **கண்காட்சிகூடங்களின் விற்பனை** | | |
| தும்முல்ல | 265,742,091 | 314,092,034 |
| நூதனச்சாலை | 76,213,119 | 93,089,687 |
| காலி | 60,187,419 | 67,105,575 |
| பேராதெணிய | 54,632,521 | 62,476,801 |
| கட்டுநாயக்கா | 33,397,236 | 42,980,562 |
| கோட்டை | 28,098,047 | 27,723,597 |
| வெலிபன்ன - 1 | 32,087,176 | 26,942,621 |
| பத்தரமுல்லை | 18,543,344 | 21,321,945 |
| கண்டி | 15,160,845 | 20,912,924 |
| கட்டுபெத்த | 15,415,364 | 16,061,827 |
| பின்னவல | 10,473,120 | 14,247,433 |
| சுபர்ப்ரான்ட் | - | 11,993,455 |
| குதிரை போட்டி திடல் | - | 3,859,365 |
| நுவரெலிய | 3,341,825 | 847,604 |
| **மொத்த காட்சிகூடங்களின் சந்தைப்படுத்தல்** | 613,292,107 | 723,655,430 |
| நேரடி/தனிபயனாக்கப்பட்ட கட்டளைகள் | 9,066,676 | 17,855,513 |
| | **622,358,783** | **741,510,943** |
| நாட்டைக் கட்டியெழுப்பும் வரி (NBT) | (5,062,438) | (4,227,910) |
| | **617,296,345** | **737,283,033** |

| **4. ஏனைய வருமானம்** | | |
|---|---|---|
| வாடகை வருமானம் | 10,727,613 | 11,786,674 |
| சேமிப்புக் கணக்கின் பொருட்டு வட்டி | 78,627 | 50,318 |
| சுற்றுலா வங்களாக்கலை ஒதுக்கீடு செய்தல் | - | 2,500 |
| அந்நியச் செலவாணி கிடைக்கப்பெறுதல் | - | 12,052 |
| | **10,806,240** | **11,851,544** |

| **5. நிதிசார் செலவினம்** | | |
|---|---|---|
| வங்கி கட்டணங்கள் | 345,488 | 378,449 |
| வங்கி மேலதிக பற்றின் வட்டி | 5,912 | 95,374 |
| கடன் வட்டி | 74,236,920 | 50,815,340 |
| | **74,588,320** | **51,289,163** |

**இலங்கை கைப்பணிகள் சபை**

**நிதி கூற்றுகளுக்கான குறிப்புகள்**

**6. வரிக்கு முன்னரான இலாபம்**

பின்வருவனவும் அடங்கலாக எல்லா செலவினங்களும் அறவிடப்பட்டதன் பின்னர் வரிக்கு முன்னரான இலாபம் கணக்கிடப்பட்டுள்ளது.

| | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| பணிப்பாளர் கட்டணங்கள் மற்றும் பணிப்பாளர் சபை கூட்டங்களின் செலவினம் | 1,301,166 | 1,273,960 |
| கணக்காய்வு கட்டணங்கள் | 1,567,992 | 1,568,720 |
| கணக்காய்வு அல்லாத சேவைகள் - ஏனைய | | - |
| சொத்துக்கள், உபகரணங்கள் மற்றும் தேய்மானம் | 25,928,260 | 24,329,922 |
| பணியாற்தொகுதியின் செலவினம் | | |
| குறித்துரைத்த பங்களிப்பு திட்டமிடல் செலவினம் | 10,277,712 | 9,818,356 |
| குறித்துரைக்கப்பட்ட நலன் திட்டமிடல் செலவினம் | 6,964,310 | 6,704,212 |
| சம்பளம் மற்றும் படிகள் | 119,426,444 | 115,989,192 |
| ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி செலவினம் | 279,589 | 201,500 |
| சட்டக் கட்டணங்கள் | 891,040 | 1,328,213 |
| தொழில்பாட்டு குத்தகை வரி | 36,212,970 | 44,555,559 |
| அனுசரணை மற்றும் அன்பளிப்பு | - | 268,778 |

**7. வரி**

இலங்கை கைப்பணி சபையின் வரி நிலைமையினை மதிப்பிடுகையில் நிறுவனத்தின் சட்டத்துடனான இயல்பு, சிக்கல் தன்மை மற்றும் தொழில்பாடுகளின் தனித்துவம் காரணமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மேற்கொள்கின்ற ஆலோசனைகளின் ஊடாக மேற்கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும் நிதி ஆண்டில் இலாபம் இருப்பினும், 2019 ஆம் ஆண்டில் திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற மீண்டுவரும் அளிப்புகளிலிருந்து உழைக்கப்பட்ட இலாபத்தை கவனத்தில் கொண்டு வரி ஒதுக்கீடுகள் கணக்கிடப்படவில்லை. இதனை வேறு வருமானத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

**8. சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் பொறித் தொகுதிகள்**

| | குறிப்புகள் | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| சொந்த சொத்துக்கள் | 8.1 | 723,573,689 | 746,074,569 |
| கட்டிடங்களின் அபிவிருத்தி செலவினம் | 8.2 | 223,692,208 | 247,038,787 |
| | | **947,265,898** | **993,113,356** |

**8.1 சொந்த சொத்துக்கள்**

| | காணிகள் | கட்டிடங்கள் | பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திரங்கள் | தளவாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | கணினி துணைக் கருவிகள் | பகுதிகள் | மேற்கொள்கின்ற மூலதன வேலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **செலவினம் அல்லது மதிப்பீடு** | | | | | | | | |
| **2018 சனவரி 01 ஆந் திகதியில் மீதி** | 395,520,000 | 248,787,761 | 100,567,471 | 58,975,366 | 30,624,103 | 30,511,175 | 45,451,390 | **910,437,266** |
| சேர்த்தல் | 517,214 | 10,000 | 34,250 | 694,808 | 262,305 | 598,575 | - | **2,117,152** |
| அகற்றல் | | | | | | | | - |
| **2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி** | **396,037,214** | **248,797,761** | **100,601,721** | **59,670,174** | **30,886,408** | **31,109,750** | **45,451,390** | **912,554,418** |
| ஆகற்றல் | | | (104,399) | | | | | **(104,399)** |
| சேர்த்தல் | - | - | 299,439 | 488,054 | 2,450,757 | 1,433,624 | - | **4,671,874** |
| **2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி** | **396,037,214** | **248,797,761** | **100,796,761** | **60,158,228** | **33,337,165** | **32,543,374** | **45,451,390** | **917,121,893** |
| **தேய்மானம்** | | | | | | | | |
| **2018 சனவரி 01 ஆந் திகதியில் மீதி** | - | 27,645,115 | 43,068,106 | 28,573,456 | 29,163,101 | 13,700,149 | - | **142,149,926** |
| ஆண்டுக்கான அறவிடல் | - | 4,995,282 | 10,058,905 | 5,905,043 | 309,602 | 3,061,090 | | **24,329,923** |
| **2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி** | | 32,640,397 | 53,127,011 | 34,478,499 | 29,472,703 | 16,761,239 | | **166,479,849** |
| சீராக்கல் 2018 | | 1,207,954 | | . | | | | **1,207,954** |
| அகற்றல் | | | (67,859) | | | | | **(67,859)** |
| ஆண்டுக்கான அறவிடல் | - | 6,203,277 | 10,066,673 | 5,992,428 | 501,649 | 3,164,231 | | **25,928,260** |
| **2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி** | **-** | **40,051,628** | **63,125,825** | **40,470,927** | **29,974,352** | **19,925,470** | **-** | **193,548,204** |
| **கொண்டு வரப்படும் பெறுமதிகள்** | | | | | | | | |
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் | 396,037,214 | 216,157,364 | 47,474,710 | 25,191,675 | 1,413,705 | 14,348,511 | 45,451,390 | 746,074,569 |
| **2019 திசெம்பர் 31 ஆந் திகதியில்** | **396,037,214** | **208,746,133** | **37,670,936** | **19,687,301** | **3,362,813** | **12,617,903** | **45,451,390** | **723,573,689** |

**8.2 கட்டிடங்களின் அபிவிருத்தி செலவினம்**

| | 2019 | 2018 |
|---|---|---|
| **செலவு அல்லது அவ்வாறு கருதப்படும் செலவினம்** | ரூபா | ரூபா |
| சனவரி 01 ஆந் திகதியில் மீதி | 384,452,630 | 384,452,630 |
| **திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி** | 384,452,630 | 384,452,630 |
| **கடன்தீர்ப்பு** | | |
| சனவரி 01 ஆந் திகதியில் மீதி | **137,413,843** | **112,073,843** |
| ஆண்டுக்கான அறவிடல் | 25,340,002 | 25,340,000 |
| **திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி** | **162,753,845** | **137,413,843** |
| **கொண்டு வரப்படும் பெறுமதிகள்** | | |
| சனவரி 31 ஆந் திகதியில் | 247,038,787 | 272,378,787 |
| மேலதிகம் 2019 | 1,993,423 | |
| **திசெம்பர் 31 ஆந் திகதியில்** | **223,692,208** | **247,038,787** |

-

## 8.2 கட்டிடங்களின் அபிவிருத்தி செலவினம்

| கடன் தீர்ப்பு இடம் | ஆண்டு | செலவினம் | விகிதாசாரம் | 2019 சனவரி 01 இல ஒட்டுமொத்த கடன் தொகை இருப்பு | 2019 ஆம் ஆண்டில் கடன் தீர்ப்பு | 2019 திசம்பர் 31 ஆந் திகதியில் திரட்டிய கடன்தீர்ப்பு மீதி | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் கட்டிடங்கள் அபிவிருத்தி செலவில் கொண்டு வரப்பட்ட பெறுமதிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| நூலகம் | 2013 | 172,847,765 | | | | | |
| நூலகம் | 2014 | 1,881,295 | | | | | |
| நூலகம் | 2015 | 389,177 | | | | | |
| மொத்தம் | | **175,118,237** | 6% | 53,747,769 | 10,101,214 | 63,848,983 | 111,269,254 |
| பத்தரமுல்லர | 2013 | 117,704,905 | | | | | |
| பத்தரமுல்லர | 2014 | 7,119,771 | | | | | |
| பத்தரமுல்லர | 2015 | 9,744,207 | | | | | |
| மொத்தம் | | **134,568,883** | 6% | 40,074,048 | 7,762,237 | 47,836,285 | 86,732,598 |
| பின்னவல | 2013 | 10,086,000 | 10% | 6,051,600 | 1,008,600 | 7,060,200 | 3,025,800 |
| வாகொல்ல | 2014 | 810,487 | 10% | 405,242 | 81,049 | 486,291 | 324,196 |
| பேராதெணிய | 2013 | 31,657,966 | | | | | |
| பேராதெணிய | 2014 | 8,968,353 | | | | | |
| பேராதெணிய | 2015 | 677,220 | | | | | |
| மொத்தம் | | **41,303,539** | 10% | 23,749,844 | 4,130,354 | 27,880,198 | 13,423,341 |
| வெலிபன்ன | 2013 | 10,269,019 | 10% | 6,161,413 | 1,026,902 | 7,188,315 | 3,080,704 |
| குதிரை போட்டி திடல் | 2013 | 1,113,613 | 10% | 668,165 | 111,361 | 779,526 | 334,087 |
| கட்டுநாயக்க | 2013 | 1,060,000 | 10% | 636,000 | 106,000 | 742,000 | 318,000 |
| உணவட்டுன | 2013 | 1,000,000 | 10% | 600,000 | 100,000 | 700,000 | 300,000 |
| K-Zone | 2013 | 8,353,071 | 10% | 5,011,841 | 835,306 | 5,847,147 | 2,505,924 |
| தும்முல்ல | | 769,781 | 10% | 307,921 | 76,977 | 384,898 | 384,883 |
| கண்டி | 2019 | 1,993,423 | 10% | - | - | - | 1,993,423 |
| **மொத்தம்** | | **386,446,053** | | **137,413,843** | **25,340,000** | **162,753,843** | **223,692,210** |

இலங்கை கைப்பணிகள் சபை

நிதி கூற்றுகளுக்கான குறிப்புகள்

| 9. இருப்புகள் | குறிப்புகள் | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|---|
| கண்காட்சி கூடங்களின் வியாபாரம் முதலாவது தரத்துடன் கூடிய முடிவுப் பொருட்கள் | | 491,902,352 | 443,175,876 |
| இரண்டாவது தரத்துடன் கூடிய முடிவுப் பொருட்கள் | | 143,672,118 | 14,810,411 |
| மூலப் பொருட்களுடன் மேற்கொள்கின்ற வேலைகள் | 9.1 | 1,856,110 | 5,397,990 |
| | | **637,430,580** | **463,384,277** |

**9.1மூலப் பொருட்களுடன் மேற்கொள்கின்ற வேலைகள்**

தனிப் பயனாக்கப்பட்ட நேரடி கட்டளைகளுக்கான உற்பத்திகள் உள்ளடங்குகின்றன.

| 10. வியாபாரம் மற்றும் ஏனைய கிடைக்கப் பெற வேண்டியவைகள் | குறிப்புகள் | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|---|
| வியாபாரம் கிடைக்கப் பெற வேண்டியவைகள் | 10.0 | 15,849,569 | 38,689,773 |
| ஏனைய கிடைக்கப் பெற வேண்டியவைகள் | 10.1 | 20,086,262 | 6,367,938 |
| வைப்புகள் மற்றும் முன்செலுத்தல்கள் | 10.2 | 50,424,338 | 38,000,723 |
| சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெற வேண்டியவைகள் | 10.3 | - | 25,660,481 |
| | | **86,360,169** | **108,718,915** |
| **10. வியாபாரம் கிடைக்கப் பெற வேண்டியவைகள்** | | | |
| வியாபார கடனாளிகள் | | 13,019,327 | 11,030,486 |
| கடன் அட்டைகளிலிருந்து கிடைக்கப் பெற வேண்டியவைகள் | | 2,830,242 | 27,659,287 |
| | | **15,849,569** | **38,689,773** |
| **10.1 ஏனைய கிடைக்கப் பெற வேண்டியவைகள்** | | | |
| பணியாற் தொகுதியினரின் கடன் | | 116,250 | 113,750 |
| கிடைக்கப் பெற வேண்டிய வாடகை | | 10,921,900 | 315,000 |
| கிடைக்கப் பெற வேண்டிய பொருளாதார சேவை கட்டணங்கள் | | 9,049,198 | 5,939,188 |
| கிடைக்கப் பெற வேண்டிய வெட் | | - | - |
| ஏனைய கிடைக்கப் பெற வேண்டியவைகள் | | (1,086) | - |
| வவுச்சர் விற்பனை மூலம் கிடைக்கப் பெற வேண்டியவைகள் | | - | - |
| | | **20,086,262** | **6,367,938** |
| **10.2 வைப்புகள் மற்றும் முன் செலுத்தல்கள்** | | | |
| பிணை வைப்பு தொகை | | 1,925,446 | 1,849,424 |
| முன் செலுத்தல்கள் | | 5,706,303 | 8,993,600 |
| செலுத்திய முற்பணம் | | 22,511,554 | 11,932,359 |
| சேதமடைந்த இருப்புகளின் கட்டுப்பாட்டு கணக்கு | | - | - |
| பிடித்து வைத்துக் கொள்ளப்பட்ட பணம் | | 12,502,564 | 500,000 |
| மீள செலுத்தும் வைப்புகள் | | 7,881,157 | 14,715,340 |
| விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய சம்பள முறை | | 77,993 | - |
| கிடைக்கப்பெற வேண்டிய பிணை | | (180,679) | 10,000 |
| | | **50,424,338** | **38,000,723** |
| **10.3 தொடர்புபட்ட நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெற வேண்டியவைகள்** | | | |
| கருத்திட்டம் மூலம் கிடைக்கப் பெற வேண்டிய பெறுமதிகள் | | - | - |
| அபேகம மூலம் கிடைக்கப் பெற வேண்டியுள்ள பெறுமதிகள் | | - | 25,660,481 |
| | | **-** | **25,660,481** |

**இலங்கை கைப்பணிகள் சபை**
**நிதி கூற்றுகளுக்கான குறிப்புகள்**

| | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **11. பணமும் பணத்திற்கு சமமானவைகளும்** | | |
| வங்கி பணம் | 26,888,268 | 22,832,694 |
| கையிருப்பு பணம் | 2,041,668 | 1,618,606 |
| | **28,929,936** | **24,451,300** |
| | | |
| **12. வருமான ஒதுக்கத்தின் ஏனைய கூறுகள்** | | |
| ஆரம்ப மீதி | 178,017,763 | 38,180,995 |
| நிலுவை சம்பளம் | - | - |
| முன்னரான ஆண்டின் திருத்தங்கள் | (54,488,789) | 139,836,768 |
| | **123,528,974** | **178,017,763** |

திரண்ட வருமானங்களின் ஒதுக்கங்கள் ஊடாக மீண்டும் கவனத்தில் கொள்ளப்பட்ட முன்னரான காலப் பகுதிக்கு ஏற்புடையதான திருத்தங்கள் வருமான ஒதுக்கத்தில் ஏனைய கூறுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **13. ஓய்வூதிய நலன் பொறுப்புகள்** | | |
| ஆரம்ப மீதி | 44,191,479 | 38,062,261 |
| ஆண்டுக்கான பணிக்கொடை ஒதுக்கீடகள் | 7,278,099 | 6,704,212 |
| ஆண்டில் பணிக்கொடை செலுத்தல் | (573,540) | (574,994) |
| இறுதி மீதி | **50,896,038** | **44,191,479** |

**இலங்கை கைப்பணிகள் சபை**

**நிதி கூற்றுகளுக்கான குறிப்புகள்**

| **14.பிற்போடப்பட்ட வருமானம் அளிப்புகளின் விபரங்கள்** | **ஆண்டு** | **கடன்தீர்பபு விகிதாசாரம்** | **கிடைக்கப்பெற்ற ஆரம்ப அளிப்பு** | **2018 திசெம்பர் 31 திகதியில் கடன் தீர்பபு மீதி** | **2019 ஆண்டில் கடன் தீர்ப்பு பெறுமதி** | **2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் கடன்தீர்ப்பு மேற்கொள்ளாத மீதி** |
|---|---|---|---|---|---|---|
| பொருளாதார அபிவிருத்தி | **2012** | 10% | 100,000,000 | 30,000,000 | 10,000,000 | 20,000,000 |
| வியாபார மற்றும் வர்த்தக அமைச்சு | **2013** | 10% | 36,000,000 | 14,400,000 | 3,600,000 | 10,800,000 |
| வரவு செலவு ஒதுக்கீடுகள் | **2013** | 10% | 10,224,643 | 4,089,857 | 1,022,464 | 3,067,393 |
| வரவு செலவு ஒதுக்கீடுகள் | **2013** | 10% | 42,109,637 | 21,054,818 | 4,210,964 | 16,843,854 |
| வரவு செலவு ஒதுக்கீடுகள் | **2013** | 10% | 11,099,920 | 4,439,968 | 1,109,992 | 3,329,976 |
| வரவு செலவு ஒதுக்கீடுகள் | **2013** | 10% | 7,828,426 | 3,131,373 | 782,843 | 2,348,530 |
| பொருளாதார அபிவிருத்தி | **2014** | 10% | 35,000,000 | 17,500,000 | 3,500,000 | 14,000,000 |
| வரவு செலவு ஒதுக்கீடுகள் | **2014** | 10% | 11,137,374 | 5,568,697 | 1,113,737 | 4,454,960 |
| **மொத்தம்** | | | **253,400,000** | **100,184,713** | **25,340,000** | **74,844,713** |

**இலங்கை கைப்பணிகள் சபை**

**நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்**

| | குறிப்பு | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|---|
| **15. நீண்ட கால கடன்** | | | |
| ஆரம்ப மீதீ | | 303,929,372 | 364,484,161 |
| ஆண்டில் பெற்றுக் கொண்ட கடன் | | 273,000,000 | 11,700,000 |
| ஆண்டில் செலுத்திய கடன் | | (145,202,443) | (72,254,789) |
| ஆண்டு இறுதி | | 431,726,929 | 303,929,372 |
| (கழித்தல்) ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய | **17** | (43,076,000) | (139,319,028) |
| **நீண்டகால கடன் பிணைப்புகள்** | | **388,650,929** | **164,610,344** |

**15.1 இலங்கை வங்கி - 2018 ஆண்டு இறுதியில் கடன் மீதி ரூபா.மில்லியன் 272**

**முன்னராக செயற்பாட்டு மூலதன தேவைகளின் பொருட்டு** 2012-2018 காலப் பகுதிக்குள் ரூபா.மில்லியன் 950 ஆன கடன் தொகை கோட்டை கட்டிடத்தை ஈட்டுக்கு வைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பெற்றுக்கொண்ட கடன் தொகையில் கண்காட்சி கூடங்களின் தரத்தினை அதிகரிப்பதற்கு கடன் செலுத்துவதற்காக லக்சல தமது வருமானத்தில் அடைவினை கைப்பற்றியது. 2013-2018 வரையிலான காலப் பகுதியில் மூலதன கடன் தொகையினை சீராக்கப்பட்டு இலங்கை வங்கியின் கடன் தொகையான ரூபா.மில்லியன் 303.9 வரை குறைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**15.2** 2019 நிதி ஆண்டின் முதலாவது காலாண்டின் பின்னர் பாஸ்கு ஞாயிறு தாக்குதல் காரணமாகநிறுவனம் பின்னடைவை எதிர் நோக்கியது. ஆகையால் அப்போதிருந்த நிலைமையினை சீராக்குவதற்கு நிலவிய கடன் மீள்கட்டமைக்கப்பட்டது. நீண்டகால கடன் 08 இல் குறுகிய கால சுழற்சி கடன்களின் மீதியினை இரத்துச் செய்து ரூபா. மில்லியன் 273 ஐ ஆன மீதி கடன் மூலதனம் 2019 ஆம் ஆண்டில் புதிய கடனாக வழங்கப்பட்டது.

2019 ஆண்டில் ரூபா.மில்லியன் 273 இற்காக செலுத்தப்பட வேண்டிய மீள்கட்டமைக்கப்பட்ட கடனுக்காக பின்வரும் வகையில் மூன்று கடன்கள் வழங்கப்பட்டன 1 வசதி - காலத்திற்கான கடன் ரூபா. 40,000,000/=

2 வசதி - காலத்திற்கான கடன் ரூபா. 200,000,000/=

3 வசதி - காலத்திற்கான கடன் ரூபா. 33,000,000/=

**15.3 பிரதேச அபிவிருத்தி வங்கி - ரூபா மில்லியன் 200**

அவசர செயற்பாட்டு தேவைகளின் பொருட்டு ரூபா.மில்லியன் 200 ஆன கடன் வசதி 2013 ஆம் ஆண்டில் களணிய பிரதேச அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. பொது திறைசேரி வங்கி ஊடாக கடன் வசதி வழங்கப்பட்டதால் லக்சல மூலம் எந்தவொரு பிணையும் வழங்கப்படவில்லை.

**15.4 திறைசேரி கடன் - ரூபா.மில்லியன் 15**

வழங்குநர்களிடம் செலுத்துவதற்குள்ள மீதிகளை செலுத்துவதற்காக பொது திறைசேரியால் 0% வட்டியின் கீழ் வழங்கப்பட்ட கடன் வசதியாகும். 2019 இரண்டாவது காலாண்டாகும்போது இந்தக் கடன் முற்று முழுதாக செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளது.

| | குறிப்புகள் | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| **16. வியாபார மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள்** | | | |
| வியாபாரம் - செலுத்தப்பட வேண்டிய | | 338,046,682 | 392,544,616 |
| ஏனைய செலுத்தப்பட வேண்டிய | | 104,787,627 | 101,510,827 |
| திரண்டு நின்ற செலவினம் | | 47,475,368 | 29,991,428 |
| | | **490,309,677** | **524,046,871** |
| **17. குறகியகால கடன்** | | | |
| நீண்டகால கடன் பொறுப்பு - தற்கால பகுதி | | 43,076,000 | 139,319,028 |
| குறுகிய கால கடன் | | 6,686,719 | 136,069,359 |
| | | **49,762,719** | **275,388,387** |
| **18. வங்கி மேலதிக பற்று** | | | |
| வங்கி மேலதிக பற்று | | **6,320,701** | **15,891,004** |

ரூபா.6,320,701 (2018: Rs.15,891,004) ஆன வங்கி மேலதிக பற்று, ஆண்டு இறுதியில் பணப் பேரேட்டில் காணப்படும் மீதியாகும். நிதி ஆண்டில் இலங்கை வங்கி கடன் மீள்கட்டமைப்புடன் வங்கி மேலதிக பற்று வசதி ரூபா.மில்லியன் 15 வரை வழங்குவதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

**இலங்கை கைப்பணிகள் சபை**

**நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்**

**19. எதிர்பாரா பொறுப்புகள் மற்றும் பிணைப்புகள்**

**சபைக்கெதிராக விசாரைணையில் உள்ள வழக்குகள்:**

| நீதிமன்ற இலக்கம் | வழக்கு தொடரப்பட்ட திகதி | வழக்கு தொடரப்பட்ட தரப்பு | வழக்கின் இயல்பு | தற்கால நிலைமை |
|---|---|---|---|---|
| DMR/0280/13 | 2015 யூலை 13 | கோட்டே நகர சபை | சோலா பெணல் பொருத்துவதற்கான உடன்படிக்கை மீறுதல் தொடர்பில் கோட்டே நகர சபையால் லக்சலவிற்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு. | கோட்டே நகர சபையிடம் வட்டியுடன் ரூபா. 4,020,000 ஆன தொகை செலுத்தப்பட வேண்டுமென தீர்ப்பு வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் லக்சல இது தொடர்பில் மேன்முறையீடு தொடரப்பட்டுள்ளதுநீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் 2018 திசெ. 31 ஆந் திகதியில் செலுத்தப்பட வேண்டிய அதற்கு சமமான தொகை வழங்கப்பட்டது. |
| DMR/2255/16 | 2016 மே 9 | டிமோ தனியார் கம்பெனி | செலுத்தப்பட வேண்டிய மீதி செலுத்தாமை காரணமாக நிபந்தனைகள் மீறுதல் தொடர்பில் டிமோ நிறுவனம் லக்சலவிற்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு ஆகம். | தீர்ப்பு வழங்கப்படவுள்ளதுடன், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் வலுவிலுருக்கும் வகையில் எந்தவொரு வழக்கும் இல்லை. |
| 138/2018/MR | 2018 மார்ச் 08 | ஜெட் ஹோல்டிங்ஸ் (JAT Holdings) தனியார் கம்பெனி | லக்சலவால் சுற்றுலா சபையிடமிருந்து பெற்றுக்கொண்ட ஒப்பந்தமொன்று ஜெட் ஹோல்டிங்ஸ் சம்பெனியிடம் உப ஒப்பந்தமாக வழங்குதல் பொருட்டு செலுத்தப்பட வேண்டியுள்ள ரூபா. 8,184,683.49 ஆன கொடுப்பனவு தொடர்பில் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு | லக்சல (இலங்கை கைப்பணிகள் சபை) பொருட்டு சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்ப்புகளை கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. |
| 139/2018/MR | 2018 ஏப்ரல் 10 | ஜெட் ஹோல்டிங்ஸ் (JAT Holdings) தனியார் கம்பெனி | உலக வர்த்தக நிலையத்தில் 22 ஆவது மாடியில் அமைந்துள்ள நடுத்தீர்ப்பு நிலையம் புனரமைப்பதற்காக லக்சலவால் நீதிமன்ற அமைச்சுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. லக்சல இதனை உப ஒப்பந்தமாக ஜெட் ஹோல்டிங்ஸ் கம்பெனியிடம் வழங்கி அந்த பணியினை பூர்த்தி செய்துள்ளது. ஆயினும் அந்த கம்பெனியிடம் செலுத்தப்பட வேண்டிய எஞ்சிய தொகை செலுத்தப்படவில்லை. இதன் காரணமாக ரூபா. 32,256,980 ஆன தொகை செலுத்தப்படாமை தொடர்பில் ஜெட் ஹோல்டிங்ஸ் கம்பெனி லக்சலவிற்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு ஆகும். | லக்சல (இலங்கை கைப்பணிகள் சபை) பொருட்டு சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்ப்புகளை கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. |

**உள்ளக உசாவுதல்கள்**

இலங்கை கைப்பணிகள் சபையின் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் பணி தடை செய்யப்பட்ட சிரேட்ட அலுவலர்கள் இரண்டு பேருக்கு எதிராக உள்ளக உசாவுதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ரீசிஎம் /ஏ/எஸ்எல்எச்பி
153/2019/எப்ஏ

தலைவர்

இலங்கை கைப்பணிச் சபை

**<u>இலங்கை கைபணிச் சபையின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை</u>**

மேற்படி அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

டப்ளியு.பீ.சீ.விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் அதிபதி

பிரதிகள்:- 1. செயலாளர் - நிதி அமைச்சு

2. செயலாளர் - பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர்

தலைவர்

இலங்கை கைப்பணிச் சபை

**இலங்கை கைபணிச் சபையின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை**

---

1. நிதிக் கூற்றுகள்

1.1 பாதகமான அபிப்பிராயம்

இலங்கை கைப்பணிகள் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் மற்றும் 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய கைப்பணி சபையுடன் இணைந்த நிறுவன சட்டத்தின் 64(3) பிரிவின் ஏற்பாடுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையில் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ). 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் சபையின் நிதிக் கூற்றுகள் (குறிப்பு 09) இன் படி இருப்புகளின் மொத்த பெறுமதி ரூபா.637,430,580 ஆகும். அன்றைய திகதியில் கணக்காய்வு பொருட்டு சமர்ப்பிக்கப்பட்ட பௌதீக இருப்பு ஒப்பாய்வு சபையின் அறிக்கைகள் பிரகாரம், இருப்புகளின் பெறுமதி ரூபா.514,227,827 ஆவதால், நிதிக் கூற்றுகளுக்கமைவாக இருப்புகளின் பெறுமதி ரூபா. 123,202,753 ஆல் அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் சபையின் நிலையான சொத்துக்களின் 4 உருப்படிகளுக்கு ஏற்புடையதாக நிதிக் கூற்றுகளின் படி மொத்த பெறுமதி ரூபா.226,835,528 ஆயினும், சொத்துக்களின் அட்டவணை படி அந்த சொத்துக்களின் மொத்த பெறுமதி ரூபா.99,793,054 ஆகும். அதன்படி மொத்தம் ரூபா.127,042,474 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) சபை கணக்காய்வு பிரிவிற்கு சமர்ப்பித்த அட்டவணை பிரகாரம், 2019 திசம்பெர் 31 ஆந் திகதியில் நேரடியற்ற கடன்கொடுநர்களின் மொத்தம் ரூபா. 36,241,797 ஆக நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும் நேரடியற்ற கடன் கொடுநர்களின் மீதியில் 3,616,379 ஆன வேறு கடன்கொடுநர்களின் பற்று மீதியொன்று குறிப்பிடப்பட்டிருந்தமையால் உண்மையான கடன்கொடுநர்கள் ரூபா.3,616,379 ஐ குறைவாக நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்குரிய வங்கி நடைமுறைக் கணக்கில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிக் கூற்றுகளின் படி மேலதிக பற்று மீதி ரூபா.233,662 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. டொலர்களைக் கொண்டு கொடுக்கல்வாங்கல் மேற்கொள்கின்ற இந்த வங்கியின் நடைமுறைக் கணக்கு மீதியை ரூபாக்களுக்கு குறைப்பாடுகளுடன் பரிவர்தனை செய்தமையால் ஆண்டு இறுதி பெறுமதி ரூபா.237,897 ஆல் குறைவாக நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி கூற்றுகள்படி சபை பிரதேச அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் மீதி ரூபா.158,726,932 ஆகும். ஆயினும், அந்த வங்கியால் வழங்கப்பட்ட மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் பிரகாரம் அன்றைய திகதியில் கடன் மீதி ரூபா 162,109,399 ஆகியதால், நிதிக் கூற்றுபடி ரூபா.3,382,467 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஊ) வருடத்தில் ஆகஸ்ட் மாதம் 09 காட்சிகூடங்களின் கடன் அட்டைகளுக்கமைவாக விற்பனைகளின் மொத்த பெறுமதி ரூபா. 21,584,455 ஆயினும், வங்கி, சபையிடம் வழங்குகின்ற குறித்த மாதத்திற்கான விற்பனை சாராம்ச அறிக்கை (Merchant Detail Transaction Report) படி மொத்த விற்பனை ரூபா.20,150,754 மட்டும் ஆவதால் மொத்தம் ரூபா.1,433,701 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(எ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சமர்ப்பித்த நிலுவை வரி அறிக்கை பிரகாரம், சபை செலுத்தப்பட வேண்டிய நாட்டைக் கட்டியெழுப்பும் வரி (NBY) பெறுமதி ரூபா. 26,498,593 ஆகும். அன்றைய திகதியில் சபையின் நிதிக் கூற்றுகள் பிரகாரம் குறித்த வரி பெறுமதி ரூபா.11,602,282 ஆவதால் செலுத்தப்பட வேண்டிய வரி பெறுமதி ரூபா.14,896,311 ஆல் குறைவாக நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஏ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சமர்ப்பித்த நிலுவை வரி அறிக்கை பிரகாரம், சபை செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரி (VAT) மீதி ரூபா. 3,858,970 ஆகும். அன்றைய திகதியில் சபையின் கணக்குகள் பிரகாரம் குறித்த வரி பெறுமதி ரூபா.2,108,828 ஆவதால் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா.1, 750,142 ஆல் குறைவாக நிதிக் கூற்றுகளில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சமர்ப்பித்த நிலுவை வரி அறிக்கை பிரகாரம், சபை செலுத்தப்பட வேண்டிய வருமான வரி ரூபா. 20,811,536 ஆகும். அன்றைய திகதியில் சபையின் நிதிக் கூற்றுகள் பிரகாரம் குறித்த வரி பெறுமதி ரூபா.25,459,280 ஆவதால், செலுத்தப்பட வேண்டிய வருமான வரி பெறுமதி ரூபா. 4,647,744 ஆல் அதிகமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) சபையின் மீளாய்விற்கான ஆண்டில் நிதிக் கூற்றுகளில் முன் செலுத்தப்பட்டவைகளின் கீழ், பிடிபணமாக மொத்தம் ரூபா. 12,502,564 காணப்பட்டது. 2011 மற்றும் 2015 ஆண்டுகள் தொடக்கம் முன் கொண்டு வரப்படும் இந்த மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அது தொடர்பாக பரிசோதனை செய்வதற்கான சாட்சிகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஓ) 2019 திசெம்பர் 31 இல் சபையிடம் கிடைக்கப்பெற வேண்டிய கிரேடிட் காட் கணக்கை பரிசோதனை செய்கையில், மீளாய்விற்கான ஆண்டில் நாட்குறிப்பினை பன்படுத்தி மொத்தம் ரூபா.26,151,430 ஐ குறித்த பேரேடு கணக்கில் வரவு வைக்கப்பட்டு, அந்தப் பெறுமதியை முன்னரான ஆண்டின் சீராக்கல் கணக்கில் பற்று வைக்கப்பட்டிருந்தது. இந்த நாட்குறிப்பு கணக்கு வைப்பதன் செவ்வைத் தன்மை பரிசோதனை செய்வதற்காக குறித்த பெறுமதி கணக்கிடப்பட்ட முறையினை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு எழுத்திலான சான்றுகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஔ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிக் கூற்றுகளின் படி, சபையின் தீர்க்கப்படாத முற்பணத்தின் மொத்த பெறுமதி ரூபா.22,511,554 ஆகும். குறித்த முற்பண பெறுமதியின் செவ்வைத்தன்மை பரிசோதனை செய்வதற்காக முற்பணங்களின் அட்டவணை மற்றும் போதியளவு சாட்சிகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(க) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் சபையில் வியாபார கடனாளிகளின் மீதியானது மொத்தம் ரூபா.22,597,699 ஆவதுடன், குறித்த கடனாளிகளின் மீதியில் மொத்தம் ரூபா.9,578.372 ஐ சந்தேகத்திற்கிடமான கடனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேறிய கடனாளிகளின் பெறுமதியான மொத்தம் ரூபா.13,019,327 ஐ நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. குறித்த தேறிய கடனாளிகளின் மீதியின் செவ்வைத்தன்மை உறுதிப்படுத்துவதற்காக, மீதியை உறுதிப்படுத்தப்படும் சாட்சிகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் மொத்தம் ரூபா.9,578,372 ஆன தொகை சந்தேகத்திற்கிடமான கடனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பினும், அதற்கான கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ங) 2019 திசெம்பர் 31 ஆந் திகதி நிதிக் கூற்றுகளில் கிடைக்கப்பெற வேண்டிய வாடகையாக குறிப்பிடப்பட்டிருந்த மொத்தம் ரூபா.10,921,900 ஆன பெறுமதியினுள் காணப்பட்ட ரூபா.1,133,557 பெறுமதி 2011 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொண்டு வரப்படும் பழைய மீதியாகும். குறித்த மீதியின் செவ்வைத்தன்மை பரிசோதனை செய்வதற்கான சாட்சிகள் சபையிடம் இருக்கவில்லை.

(ச) 2019 திசெம்பர் 31 இல் நிதிக் கூற்றுகளில் அட்டுறு செலவினமாக ரூபா.47,475,368 ஐ குறிப்பிடப்பட்டிருந்தது. குறித்த மொத்த பெறுமதிக்கு ஏற்புடையதாக கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையில் ரூபா.6,792,561 கடந்த ஆண்டின் அட்டுறு செலவினமாக குறிப்பு வைக்கப்பட்டிருந்ததுடன், குறித்த பெறுமதி தொடர்பாக எழுத்திலான சாட்சிகள் சமர்ப்பிக்கப்படாமையால் அதன் செவ்வைத்தன்மை பரிசோதனை செய்வதற்கு முடியில்லை.

(ஞ) நிதிக் கூற்றுகள் சமர்ப்பித்தல் தொடர்பான கணக்கீட்டு நியமம் 110 ஆவது பந்தி பிரகாரம், இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் படி கணக்கீட்டு தவறுகளை காலம்கடந்தவைகளுக்கு சீராக்குகையில், பிடிபண உழைப்புகள் கணக்கில் ஆரம்ப மீதிக்கு சீராக்கப்படுதல் வேண்டுமாயினும், சபையின் 2019 திசெம்ப்ர் 31 ஆந் திகதியில் தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று தயாரிக்கையில் ரூபா.554,488,759 ஐ முன்னரான ஆண்டின் தவறுகளை, பிடிபண உழைப்புக் கணக்கில் ஆரம்ப மீதிக்கு சீராக்காது, முன்னரான ஆண்டின் சீராக்கல்களாக பிரிதொரு நிரலில் சீராக்கப்பட்டிருந்தது.

(ண) சபையில் கணக்கு வைப்பதற்காக SAP மற்றும் POS என்ற 02 கணினி நிகழ்ச்சித்திட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த இரண்டு முறைமைகளுக்குள் தரவுகளை பரிமாற்றம் செய்வதற்காக நாளாந்தம் சுயமாக செயற்படும் அதிகளவிலான நாட்குறிப்பு பதிவுகளின் எண்ணிக்கை கணக்கீடு செய்யப்படுகிறது. எந்தவொரு நபரும் முன்வராமல் பதியப்படுகின்ற இந்த கொடுக்கல்வாங்கல் மூலம் நாளாந்தம் காசேட்டிலும் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் கணக்கு வைக்கப்படுகிறது. மாதிரி பரிசோதனைகளின் படி 2019 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் பணப் காசேட்டின் வரவில் மொத்தம் ரூபா.8,115,546 ம் மற்றும் செலவில் மொத்தம் ரூபா.42.776,136 ம் என்ற வகையில் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான

நாட்குறிப்பு உறுதிச்சீட்டுகள், எழுத்திலான சாட்சிகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றின் செவ்வைத்தன்மை பரிசோதனை செய்வதற்கு முடியவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற

கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு

அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படும் தரப்புகளை அறிவுறுத்தப்பட்டது.

## 2. ஏனைய சட்டத்துடனான தேவைகள் தொடர்பான அறிக்கை

---------------------------------------------------------------------------

**2018** ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, எனது அறிக்கையில் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு உரிய நிதி அறிக்கைகள் அதிகார சபையில் பேணப்பட்டிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகார சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இவ் அறிக்கையில் 1.2 (அ), (எ) (ஏ), (ஒ), (ஓ) (க), (ச), (ண) அவதானிப்புகள் தவிர்ந்து, முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே அதிகாரசபையினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் அதிகாரசபையின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் அதிகாரசபை இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல்.

**சட்டங்கள் விதிகள்/ஏற்பாடுகளின் தொடர்**

**-----------------------------------------------------**

| | | |
|---|---|---|
| அ | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 9:3:1 (vi) மற்றும் (vii) பிரிவுகள் | இந்த பிரிவுகள் பிரகாரம் 03 மாதங்கள் என்ற ஆகக்கூடிய காலவெல்லையின் பொருட்டு பதில் கடமையாற்றும் நியமனம் வழங்கப்படுதல் வேண்டுமாயினும், 2015,2018 ஆண்டுகள் தொடக்கம் 2020 நவம்பர் மாதம் வரை சபையின் பிரதான 05 பதவிகளில் பதில்கடமையாற்றுவறத்கான நியமனம் வழங்கப்பட்டிருந்தது. |
| | (ii) 9.14.1 மற்றும் 9.14.2 | இந்த சுற்றறிக்கை பிரகாரம் அலுவலக நடைமுறைகளை தயாரித்து அதற்கு திறைசேரி செயலாளரின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை. |

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல்.

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) சபையின் பிரதான நிறைவேற்றலுவலர்/பணிப்பாளர் நாயகப் பதவியில் ஒப்பந்த சேவைக் காலம் முடிவடைதல் மற்றும் பிரதான உள்ளக கணக்காய்வாளர் ஓய்வு பெற்றமையால் 2020 பெப்ருவரி மாதம் தொடக்கம் குறித்த பதவிகள் வெற்றிடமாகி இருந்தன. கணக்காய்வு திகதியான 2020 நவம்பர் மாதம் வரை குறித்த வெற்றிடங்களை நிரப்பாமையால் உள்ளக கணக்காய்வுப் பிரிவு செயலற்று காணப்பட்டதுடன், சபையின் பிரதான தொழில்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் எடுத்தல் தாமதமடைதலானது, சபையின் நிலைப்பாட்டுக்கு பாதகமான வகையில் தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது.

(ஆ) சபையின் கணக்கு வைத்தல் மற்றும் இருப்புகளின் கட்டுப்பாட்டுக்காக SAP என்ற மென்பொருளும் நாளாந்த விற்பனை பொருட்டு POS என்ற மென்பொருளும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த மென்பொருள்களை நீண்ட காலமாக பயன்படுத்தினாலும், குறித்த மென்பொருட்களுக்கான மூல கம்பெனியுடன் சேவை உடன்படிக்கைகள் இற்றைப்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறு சேவை உடன்படிக்கைகளை இற்றைப்படுத்தாமை காரணமாக இந்த மென்பொருட்களில் புதிய உள்ளடக்கங்கள் (New Version) மற்றும் மேம்படுத்தல்கள் இழக்கப்பட்டிருந்தன. நிறுவனத்தின் தரவுகள் Back up என்ற வகையில் வைத்திருப்பினும், அவசர சந்தர்ப்பமொன்றில் குறித்த தரவுகளை முறைமையில் மீள உள்ளடக்குவதற்கு இயலாமை காரணமாக (Reinstallation) முறைமையிலுள்ள நிறுவனத்தின் தரவுகள் தொடர்பாக அதிகளவிலான ஆபத்து காணப்பட்டது.

**டப்ளியு.பீ.சீ.விக்கிரமரத்ன**

**கணக்காய்வாளர் அதிபதி**